# கள்ளக்குறிச்சி நகராட்சி

## நகர் மன்ற சாதாரணக் கூட்டம்

"வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல"                    குறள்...

**கூட்டம் எண். 03 / 2024**                    **நாள். 12.07.2024**

கள்ளக்குறிச்சி நகராட்சியின் நகர் மன்ற சாதாரணக் கூட்டம் எதிர்வரும் 19.07.2024 ஆம் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நகர் மன்ற தலைவர் தலைமையில், நகராட்சி நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது. அச்சமயம் நகர் மன்ற துணை தலைவர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**நகர் மன்ற தலைவர்**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**

## கூட்டபொருள்

### பொருள் எண். 01

கள்ளக்குறிச்சி நகராட்சியில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (SUH) 2023-2024-ன் கீழ் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனை வளாகத்தில் தங்கும் விடுதி அமைக்கும் பணி ரூ. 145.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள, NULM-SUH, 10th Project Sanctioning Committee Meeting held on 22.01.2024-ல் அனுமதி வழங்கப்பட்டது. மேலும், தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநகம், சென்னை-28 அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 18484/2023/DO1, நாள். 02.02.2024-ல் மேற்படி பணிக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்வதற்கு, 23.02.2024 அன்று மின்னனு (E-Tendering) முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், மின்னனு முறையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ் வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | **தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (SUH) 2023-2024** கள்ளக்குறிச்சி நகராட்சி அரசு மருத்துவமனை வளாகத்தில் புல எண். 337ல், தங்கும் விடுதி அமைத்தல் பணி | ரூ 1,45,00,000 | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 0.17% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. J.மகேஸ்வரன், கள்ளக்குறிச்சி | 3.34% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.17% குறைவான விலைவிகித ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் "0.17%" மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள "**திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி**" என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மேல்நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை திட்ட நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 3175 / 2023 / இ1)

## பொருள் எண். 02

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடித ந.க.எண்.16118/2022/EA-2, நாள்.02.01.2024-ல், 15வது நிதிக்குழு மான்யம் (Untied Grant) 2022-2023-ன் கீழ், ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.8.31 இலட்சத்திற்கு கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு,23.02.2024 அன்று மின்னனு (E-Tendering) முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், மின்னனு முறையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ் வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | **15வது நிதிக்குழு மானியம் (2022-2023 Untied Grant)** துருகம் சாலை மயானத்தில் பேவர் பிளாக் நடைபாதை அமைத்தல் | ரூ 8,31,000 | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 0.03% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. J.மகேஸ்வரன், கள்ளக்குறிச்சி | 3.43% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.03% குறைவான விலைவிகித ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் "0.03%" மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள "**திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி**" என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மேல்நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை திட்ட நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2791 / 2023 / இ1)

## பொருள் எண். 03

கள்ளக்குறிச்சி நகராட்சியில் செயல்படுத்தப்படும் திட்டப்பணிகள் குறித்த நிர்வாக ரீதியாக செய்யப்படும் அறிவிப்புகள், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள், தொழில் மலர் விளம்பரங்கள் , தமிழ்நாடு அரசின் சாதனை மலர் விளம்பரம் மற்றும் இதர அறிவிப்பு விளம்பரங்கள் ஆகியவைகளை பிரசுரம் செய்வதற்கு 2024-2025 ஆம் ஆண்டிற்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவின தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1033 / 2024 / இ1)**

## பொருள் எண். 04

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடித ந.க.எண்.16118/2022/EA-2, நாள்.02.01.2024-ல், 15வது நிதிக்குழு மான்யம் (Tied Grant) 2022-2023-ன் கீழ், ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.12.61 இலட்சத்திற்கு கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 23.02.2024 அன்று மின்னனு (E-Tendering) முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், மின்னனு முறையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ் வருமாறு.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | **<u>15வது நிதிக்குழு மானியம் (2022-2023 Tied Grant)</u>** நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திற்கு மின் மோட்டார்கள் கொள்முதல் செய்தல் | ரூ 12,61,000 | M/s AS கன்ஸ்ட்ரகஷன்ஸ் கள்ளக்குறி ்சி | 0.03% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. N.செங்கோட்டையன். கள்ளக்குறிச்சி | 3.43% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.03% குறைவான விலைவிகித ஒப்பந்தப்புள்ளி வழங்கிய **M/s AS கன்ஸ்ட்ரகஷன்,** கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் "0.03%" மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **"M/s AS கன்ஸ்ட்ரகஷன்ஸ்,** கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மேல் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை திட்ட நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2791 / 2023 / இ1)**

## பொருள் எண். 05

கள்ளக்குறிச்சி நகராட்சியில், குடிநீர் நிதி 2023-2024ன் கீழ், கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு 23.02.2024-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 07 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப்பம்புகள், விசைப்பம்புகள் பழுது நீக்கம் செய்தல் / உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | ரூ. 9,95,000/- | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 0.12% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு.J.மகேஷ்வரன், கள்ளக்குறிச்சி | 2.98% மதிப்பீட்டி ்கும் அதிக ் |
| 2. | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 08 முதல் 14 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப்பம்புகள், விசைப்பம்புகள் பழுது நீக்கம் செய்தல் / உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | ரூ. 9,95,000/- | திரு. A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி | 0.11% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 4.51% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3. | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 15 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப்பம்புகள், விசைப்பம்புகள் பழுது நீக்கம் செய்தல் / உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | ரூ. 9,95,000/- | திருமதி. M.செல்லம்மாள், கள்ளக்குறிச்சி | 0.13% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 3.97% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 4. | நகராட்சிக்கு சொந்தமான ஆறு மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் நவீன அளவு மானிகள் (Digital Scale) பொருத்துதல் | ரூ. 9,25,000/- | M/s Real Tech system Eroad | 0.26% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s SIMMS Technologies, TIRUNELVELI | 1.03% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கிய ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
4. பட்டியல்படி தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 036 / 2024 / இ2)

## பொருள் எண். 06

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடித ந.க.எண்.11919/2022/EA-2, நாள்.29.01.2024-ல், 15வது நிதிக்குழு மான்யம் (Untied Grant) 2023-2024-ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.39.00 இலட்சத்திற்கு கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்வதற்கு 29.02.2024 அன்று மின்னனு (E-Tendering) முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், மின்னனு முறையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ் வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| **(15வது நிதிக்குழு மானியம் – 2023-2024 Untied Grant)** | | | | |
| 1. | கருணாபுரம் புதிய காலனி 3வது தெரு (042009R395), மணிமேகலை நகர் குறுக்கு தெரு மேற்கு (042010R353), வைஷ்னவி நகர் (042013R051) ஆகிய பகுதியில் சேதமடைந்த சிமெண்ட் சாலைகளை மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ 21,00,000/- | **திருமதி.S.பத்மா கள்ளக்குறிச்சி** | **0.03% மதிப்பீட்டிற்கும் குறைவு** |
| | | | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 4.96% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | ராஜாம்பாள் நகர் பிரதான சாலை குறுக்கு தெரு (042017R528), கடைவீதி தெரு(042005R176) ஆகிய பகுதியில் சேதமடைந்த சிமெண்ட் சாலைகளை மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ 18,00,000/- | திருமதி. M.சரோஜா. கள்ளக்குறிச்சி | **0.01% மதிப்பீட்டிற்கும் குறைவு** |
| | | | **M/s சக்தி கன்ஸ்ட்ரகஷ்ன்ஸ் கள்ளக்குறிச்சி** | 3.84% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கிய ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கி மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கி மேல் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை திட்ட நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 395 / 2024 / இ1)

## பொருள் எண். 07

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவில் தெருமின் விளக்கு பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் பயன்பாட்டில் உள்ள TN 15 W 0158 Tata Ace வாகனத்தின் தகுதிச்சான்று 15.02.2024 ஆம் தேதியுடன் முடிவடைந்துள்ளதால் மேற்படி வாகனத்தில் உள்ள பழுதுகள் நீக்கி பராமரிப்பு பணிகள் செய்து தகுதிச்சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளது. மேற்படி பணிகள் ரூ.6,00,000/- (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி வாகனத்தில் உள்ள பழுதுகள் நீக்கி பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு தகுதிச்சான்று புதுப்பிக்கும் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு ஏற்படும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2104 / 2022 / இ2)**

## பொருள் எண். 08

கள்ளக்குறிச்சி நகராட்சியின் அலுவலக பயன்பாட்டிற்கு தற்போது 3 எண்ணிக்கை ஈப்பு வாகனங்கள் (TN15 MC3299, TN15 MC3926 மற்றும் TN 15 Y 6671 ) பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மேற்படி ஈப்பு வாகனங்களின் மூலம், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களால் நடத்தப்படும் நேரடி ஆய்வு கூட்டங்களில் கலந்து கொள்ள வெளியூர்களுக்கு செல்ல வேண்டியிருப்பதால், வாகனங்களில் எவ்வித பழுதுகளும் இல்லாமல் சீராக இயக்குவதற்கு ஏற்ப பராமரிக்கப்பட வேண்டிள்ளது. மேற்படி மூன்று ஈப்பு வாகனங்களிலும் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள், காலமுறை பராமரிப்பு, ஆயில் சர்வீஸ், கிலோ மீட்டர் சர்வீஸ் உள்ளிட்ட இதர அனைத்து பழுதுகளையும் பழுது நீக்கம் செய்து பராமரிப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே, மேற்படி அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் ஈப்பு வாகனங்களை பராமரிப்பு பணிகள் செய்வதற்கு மகேந்திரா & மஹேந்திரா நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் நிறுவனத்தின் மூலமாக மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினமாக 2024-2025 ஆம் ஆண்டிற்கு ரூ.7,00,000/-(ரூபாய் ஏழ இலட்சம்மட்டும்)-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி வாகனங்களில் ஏற்படும் பழுதுகளை அகற்றுவதற்கு மஹேந்திரா & மஹேந்திரா கம்பெனியின் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் வழியே பழுது நீக்க பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பெறப்படும் பட்டியலின் அடிப்படையில் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 830 / 2022 / இ2)**

## பொருள் எண். 09

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில், நகராட்சிக்கு சொந்தமான 400–க்கும் மேற்பட்ட தெருமின் விளக்கு மின் இணைப்புகள் மற்றும் 300–க்கும் மேற்பட்ட சிறுமின் விசைப்பம்புகள் / விசைப்பம்புகள் உள்ளன. மேலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மூலம் இந்நகராட்சிக்கு தெருமின் விளக்கு, குடிநீர் விநியோகம் மற்றும் இதர பயன்பாட்டிற்கு பெறப்பட வேண்டிய புதிய மின் இணைப்புகள், கூடுதல் மின் பளு பெறுதல், சாலைகளின் நடுவே உள்ள மின் கம்பங்களை மாற்றி அமைத்தல் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மூலம் பெறப்படும் கேட்பின் அடிப்படையில் தொகையினை செலுத்தப்பட வேண்டியுள்ளது.

எனவே, இந்நகராட்சி எல்லைக்குட்பட்பட்ட பகுதிகளில் ஆங்காங்கே தேவைப்படும் இடங்களில் புதிய தெருமின் விளக்கு, குடிநீர் விநியோகம் மற்றும் இதர பயன்பாட்டிற்கு பெறப்படும் மின் இணைப்புகள், கூடுதல் மின் பளு பெறுதல், சாலைகளின் நடுவே உள்ள மின் கம்பங்களை மாற்றுதல் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு2024–2025 ஆம் ஆண்டிற்கு தோராய செலவினத் தொகை ரூ. 5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மூலம் அவ்வப்போது பெறப்படும் கேட்பு பட்டியலின் அடிப்படையில் தொகையினை செலுத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவின தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 580 / 2022 / இ2)

## பொருள் எண். 10

கள்ளக்குறிச்சி நகராட்சியில், வருவாய் நிதி 2023–2024ன் கீழ், கீழ்க்காணும் பணிக்கு 08.03.2024–ம் தேதி அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | விலைப்புள்ளி வழங்கியவர் பயர் | விலைப்புள்ளி தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொறியியல் பிரிவில் தெருமின் விளக்குகள் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு பயன்படுத்தப்படும் TN 15 W 0158–என்ற வாகனத்தின் பழுதுகள் நீக்கம் செய்தல் மற்றும் வாகனத்தின் தகுதி சான்று புதுப்பித்தல் பணி | M/s. Sakthi Body Works, Chennai | ரூ. 5,79,380/– |
| | | M/s Sri Ayyanar Auto Garage, Chennai | ரூ. 5,99,086/– |
| | | M/s A.R.V Body Builders, Chennai | ரூ. 6,21,506/– |

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் விலைப்புள்ளிகளில் ரூ.579380/–க்கு குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள "M/s. Sakthi Body Works, Chennai" என்ற நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளிகள் அளித்த "M/s. Sakthi Body Works, Chennai" என்ற நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
4. பட்டியல்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2104 / 2022 / இ2)

## பொருள் எண். 11

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர்–12, அவர்களின் காணொளி காட்சி ஆய்வு கூட்ட அறிவுறுத்தலின் படி 2024ஆம் ஆண்டின் கோடை வெயில் காரணமாக பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நிழல் பந்தல் அமைத்து குடிநீர் வசதிகள் அமைக்க தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் நிதி 2024–2025ன் கீழ், பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022, பிரிவு 57(7) ன் கீழ், பணிகள் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் நிழல் பந்தல் அமைத்து குடிநீர் வசதிகள் ஏற்படுத்தும் பணி | ரூ. 3,00,000/– |

மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணியை ஒப்படைப்பு பணியாக **திரு.AK.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி** என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் நிழல் பந்தல் அமைத்து குடிநீர் வசதிகள் ஏற்படுத்தும் பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி பணிகள் மேற்கொண்டதற்கு வரப்பெறும் பட்டில் படி செலவுத் தொகையை **திரு.AK.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி** என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் கோடை வெயில் காரணமாக பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நிழல் பந்தல் அமைத்து குடிநீர் வசதிகள் ஏற்படுத்தும் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022, பிரிவு 57(7) ன் கீழ் பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 898 / 2024 / இ1)

## பொருள் எண். 12

கள்ளக்குறிச்சி மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க.எச்1/2900/2023, நாள்.20.03.2024ல் 2024 நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 19.04.2024ம் தேதி நடைபெற உள்ளதை முன்னிட்டு கள்ளக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் உள்ள 10 பள்ளிகளில் அமைக்கப்பட உள்ள 40 வாக்குசாவடிகளில் மையங்களில் குடிநீர் நிதி வசதிகள் மற்றும் கழிப்பறை வசதிகள் அமைத்து தர தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணிகளை வருவாய் நிதி 2024-2025ன் கீழ், பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022, பிரிவு 57(7) ன் கீழ், பணிகள் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் உள்ள 10 பள்ளிகளில் அமைக்கப்பட்ட 40 வாக்குசாவடிகளில் குடிநீர் வசதிகள் மற்றும் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தும் பணி | ரூ.9,90,000/- |

மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணியை ஒப்படைப்பு பணியாக **திரு.AK.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி** என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் உள்ள 10 பள்ளிகளில் அமைக்கப்பட்ட 40 வாக்குசாவடிகளில் குடிநீர் வசதிகள் மற்றும் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தும் பணிகள் நல்ல முறையில் முடிக்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி பணிகள் மேற்கொண்டதற்கு வரப்பெறும் பட்டில் படி செலவுத் தொகையை **திரு.AK.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி** என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் உள்ள 10 பள்ளிகளில் அமைக்கப்பட்ட 40 வாக்குசாவடிகளில் குடிநீர் வசதிகள் மற்றும் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தும் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022, பிரிவு 57(7) ன் கீழ் பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 852 / 2024 / இ1)**

## பொருள் எண். 13

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க.பே.மே.5412/2022, நாள்.09.05.2024ல் கள்ளக்குறிச்சி மாவட்டம் தானியங்கி மழைமானி (ARG) அமைய உள்ள இடத்தில் பாதுகாப்பு வேலி அமைக்குமாறு கூடுதல் தலைமைச் செயலர்/ வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் காணொளி காட்சியின் போது கேட்டுக்கொண்டதற்கிணங்க ARG-க்கு பாதுகாப்பு வேலி (Fencing) அமைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி மழைமானி (ARG) அமைக்கப்பட உள்ளது நகராட்சி எல்லைக்குள் 1-ARG அமைந்துள்ளதால் அதற்கு பாதுகாப்பு வேலி அமைத்து தர தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மழைமானி (1–ARG)–க்கு பாதுகாப்பு வேலி (Fencing) அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.2,00,000/–க்கு (ரூபாய் இரண்டு இலட்சம் ஐம்பதாயிரம் மட்டும்) இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1082 / 2024 / இ1)

## பொருள் எண். 14

கள்ளக்குறிச்சி நகராட்சி வார்டு எண்10, சர்வே எண்.209/1B2,5A, 210/1, 211/1B2, 213/2A–ல் உள்ள விநாயகநகர் பூங்காவை கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022–2023–கீழ் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மு.க.ஸ்டாலின்,அவர்களால் 24.02.2024 அன்று காணொளி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டு தற்போது பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

தற்போது, கள்ளக்குறிச்சி துருகம் சாலையில் உள்ள ஸ்ரீ சஞ்சீவி மருத்துவமனை, நிர்வாகத்தின் கடித நாள்.17.04.2024ல் மேற்படி விநாயகா நகர் பூங்காவை மருத்துவமனை நிர்வாகத்தின் மூலம் பராமரிப்பதற்கு உரிய அனுமதி வழங்க கோரப்பட்டுள்ளது. மேற்படி, பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான விநாயகா நகர் பூங்காவை ஸ்ரீ சஞ்சீவி மருத்துவமனை, நிர்வாகத்தின் வழியே பராமரிப்பதற்கு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி, நகராட்சிக்கு சொந்தமான விநாயகா நகர் பூங்காவை கள்ளக்குறிச்சி ஸ்ரீ சஞ்சீவி மருத்துவமனை, நிர்வாகத்தின் வழியே பராமரிப்பதற்கு நகராட்சியால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 3021 / 2023 / இ1)

## பொருள் எண். 15

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11ல் செக்குமேட்டு தெருவில் உள்ள சிறுபாலம் பழுதடைந்துள்ளது. இதனால் வடிகால்களில் கழிவுநீர் முறையாக செல்லாமல் ஆங்காங்கே தேங்கி பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்படுத்தும் வகையில் உள்ளதால் அப்பகுதி பொதுமக்களுக்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது. எனவே, மேற்படி பழுதடைந்த சிறுபாலத்தை மறுசீரமைப்பு பணிகள் செய்து தர வேண்டி 11–வது வார்டு பொதுமக்களின் புகார் மனு நாள்.19.02.2024ம் தேதிய கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பகுதியில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி பழுதடைந்த சிறுபாலத்தை மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசிய தேவையாக அமைகிறது.

எனவே மேற்படி மறுசீரமைப்பு பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.85,000/–(ரூபாய் என்பத்தி ஐந்தாயிரம் மட்டும்)–க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 546 / 2024 / இ1)

**பொருள் எண். 16**

கள்ளக்குறிச்சி நகராட்சி அரசாணை (நிலை) எண்.57, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.02.05.2023ன் படி தற்போது தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் குடிநீர் விநியோகம் பணி, ஓட்டுநர் பணி மற்றும் இதர பணிகளுக்கு நிரந்தர பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படாமல் உள்ளது. எனவே, இந்நகராட்சியில் அன்றாட பணிகளான நிர்வாக பணிகள், திட்டப்பணிகள் மற்றும் பொதுமக்களின் அத்தியாவசிய பணியான குடிநீர் விநியோகம் ஆகிய பணிகளை தொய்வின்றி உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டியுள்ளது மேற்படி, நிரந்தர பணியிடங்கள் இல்லாத பணிகளை மேற்கொள்ள கள்ளக்குறிச்சி தமிழன் ஆடவர் சுயஉதவி குழுவின் மூலம் 18 நபர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும்,மேற்படி பணிக்கு பயன்படுத்தப்படும் பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர், கள்ளக்குறிச்சி அவர்களின் 2023-2024ஆம் ஆண்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட விலை விகித்தில் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது தமிழன் ஆடவர் சுயஉதவி குழுவின் மூலம் பணிகள் மேற்கொள்ள 31.05.2024 வரை நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனவே, குடிநீர் விநியோகம் மற்றும் ஓட்டுநர் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு பணிகளின் மேற்படி பணிகளை ஏற்கனவே செய்து வரும் தமிழன் ஆடவர் சுயஉதவி குழுவின் மூலம் தொடர்ந்து 30.06.2025 வரை மாவட்ட ஆட்சித் தலைவர், கள்ளக்குறிச்சி அவர்களின் 2024-2025 ஆம் ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் பணி வகைப்பாட்டின் அடிப்படையில் (கனிணி இயக்குதல், குடிநீர் விநியோக பணிகள் மற்றும் ஒட்டுநர்கள்) நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஊதிய விலை விகிதத்தில் 18 பணியாளர்களைக் கொண்டு மேற்கொள்வதற்கும், அதற்கு ஏற்படும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தமிழன் ஆடவர் சுய உதவிக்குழு மூலமாக 18 நபர்கள் வழியே பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருவதால், அவர்கள் மூலமாகவே 31.06.2025 வரையிலான காலத்திற்கு, மாவட்ட ஆட்சித் தலைவர், கள்ளக்குறிச்சி அவர்களின் 2024-2025 ஆம் ஆண்டிற்கு பணியாளர்களின் பணி வகைப்பாட்டின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஊதிய விலை விகித அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதத்தில் பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தமிழன் ஆடவர் சுய உதவிக்குழுவிடமிருந்து வரப்பெறும் பட்டியல் படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1630 / 2023 / இ1)**

## பொருள் எண். 17

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளில் அமைந்துள்ள சொத்துவரி கட்டிடங்களுக்கான நிலுவை தொகை நீண்ட காலமாக வசூலிக்க இயலாத நிலையில், பல்வேறு தேதிகளில் அறிவிப்புகள் தபால் வழியாக அனுப்பி வைக்கப்பட்டது. இருப்பினும் நிலுவை தொகையானது நீண்ட காலமாக தொடர்ந்து இருந்து வந்த நிலையில், அரசு வழக்கறிஞர் அவர்களின் (Standing Counsel) வழியே நீண்ட காலமாக நிலுவையில் உள்ள இனங்களுக்கான 183 வழக்கு தொடர்வது சம்மந்தமான அறிவிப்புகள் அனுப்பி வைக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு வருகிறது. அரசு வழக்கறிஞர் அவர்கள் வழியாக அறிவிப்புகள் அனுப்பி வைத்தமைக்கான (ஒரு அறிவிப்புக்கான தொகை ரூ.400 வீதம் 183 அறிவிப்புகளுக்கான தொகை ரூ.183x400=73200) தொகை ரூ.73200/-ம், இதர செலவினம் (தட்டச்சு மற்றும் பதிவுக்கட்டணம்) ரூ.5000 என ஆக மொத்தம் கூடுதல் தொகை ரூ.78200/- (ரூபாய் எழுபத்தெட்டாயிரத்து இருநூறு மட்டும்) நகராட்சி செலுத்த கோரி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசு வழக்கறிஞர் வழியாக நிலுவைதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பி வைத்தமைக்கான தொகை ரூ.78200ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 1284 / 2024/ அ1)**

## பொருள் எண். 18

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளில் உள்ள சொத்துவரி, காலிமனை வரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி மற்றும் வரியில்லா இனங்கள் தொடர்பான வசூல் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் நகரின் பிரதான இடங்களில் பேனர்கள் அமைத்தது, சொத்துவரி, காலிமனை வரி, குடிநீர் கட்டணம் ஆகிய வரியினங்களுக்கு அறிவிப்புகள் அச்சடித்து வரிவிதிப்புதாரர்களுக்கு சார்வு செய்யவும் மற்றும் கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான நாளங்காடி, பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளுக்கான கடை எண்கள் அனைத்தும் பல்வேறு காலக்கட்டங்களில் வழங்கப்பட்ட நிலையில் தற்போது கடை எண்கள் அறிய இயலாத நிலை உள்ளக் காரணத்தினால், அந்தந்த கடைகளுக்கு அடையாளம் தெரியும் வகையில் கடை எண் எழுதவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரி விதிப்புதாரர்களுக்கு வரி மற்றும் வரியில்லா இனங்கள் தொடர்பான அறிவிப்புகள் அச்சடித்து சார்வு செய்ய ஆகும் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 1283 / 2024/ அ1**

## பொருள் எண். 19

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகையினங்களில் கீழ்க்கண்டுள்ள இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கடந்த 01.03.2024 அன்று கோரப்பட்டது. பாராளுமன்ற பொதுத்தேர்தலுக்கான நன்னடத்தை விதிகள் அமலில் இருந்த காரணத்தினால் 01.03.2024 அன்று நடைபெற இருந்த பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் ஒத்தி வைக்கப்பட்டது. நிர்வாக நலன் மற்றும் நகராட்சியின் நிதியிழப்பினை கருத்தில் கொண்டு 31.03.2024உடன் ஓராண்டு முடிவுற்ற ஆண்டு குத்தகை இனங்கள் மூன்றிற்கு 01.04.2024 முதல் குத்தகை இனம் பொது ஏலம் இறுதி செய்யப்பட்டு ஒப்படைப்பு செய்யும் காலம் வரையிலான மாதங்களுக்கு மட்டும் ஏற்கனவே உள்ள குத்தகையினை எடுத்து நடத்தி வரும் குத்தகைதாரர்களுக்கு 01.04.2023 முதல் 31.03.2024 வரையிலான கேட்பு தொகையின் அடிப்படையில் நடத்திக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஆண்டு குத்தகையின விபரம் | குத்தகைதாரர் பெயர் (திருவாளர்) |
|---|---|---|
| 1 | சாலையோர சுங்க வசூல் செய்யும் உரிமம் | எம்.செல்வராஜ் |
| 2 | பேருந்து நிலைய கட்டண கழிவறை வசூல் உரிமம் | ஓய்.கவிதா |
| 3 | பேருந்து நிலைய இரு சக்கர வாகன நிறுத்துமிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | கே.தமிழ்செல்வன் |

**அலுவலகக் குறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சியின் நிதியிழப்பினை கருத்தில் கொண்டு மேற்கண்ட பட்டியலில் உள்ள ஓராண்டு இனங்கள் மூன்றிற்கு 01.04.2024 முதல் குத்தகை இனம் பொதுஏலம் இறுதி செய்யப்பட்டு ஒப்படைப்பு செய்யும் காலம் வரையிலான மாதங்களுக்கு மட்டும் 31.03.2024 வரையிலான குத்தகை தொகையின் அடிப்படையில் நடத்திக் கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர்ந்து குத்தகை இனத்தை நடத்திக்கொள்ள உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024இன் நன்னடத்தை விதிகள் தளர்வு செய்த பின்னர் மேற்காணும் மூன்று இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோர மன்றம் அனுமதிக்கலாம்.
4. மேற்படி பணிக்கு பொது ஏல அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் பிரசுரம் செய்யுவும், விளம்பர செலவினத்திற்கான பட்டியல் தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.338/ 2024/ அ 2)

## பொருள் எண். 20

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 15, கீழ் அக்ரகாரத்தெரு மற்றும கடைவீதி பகுதியில் உள்ள திரு ரகுனாபாய், சந்தானம், ஜலஜா, சின்னகண்ணன் மற்றும சுரேந்திரன் ஆகியோர் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வரியினங்களுக்கான கட்டிடங்கள் கடந்த 2023-2024ல் இடிக்கப்பட்டுள்ள நிலையில் 31.03.2024 வரை நிலுவையின்றி அக்கட்டிடங்களுக்கான சொத்துவரி மற்றும் தொழில் வரியினை செலுத்தியுள்ளார்கள். எனவே கீழ்க்கண்ட சொத்துவரி மற்றும் தொழில்வரிக்கான கேட்பானது தொடர்ந்து 2024-2025ம் ஆண்டு முதல் நீக்கம் செய்ய கோரி விண்ணப்பம் கொடுத்துள்ளார்கள். வரப்பெற்ற விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வரிவிதிப்பு எண் | அமைவிடம் | அரையாண்டு வரித்தொகை ரூ | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 042/015/900664 | கடைவீதி | 2496 | 4992 |
| 2 | 042/015/900765 | கீழ்அக்ரகாரதெரு | 13838 | 27676 |
| 3 | 042/015/900766 | | 170 | 340 |
| 4 | 042/0 5/900767 | | 9346 | 18692 |
| 5 | 042/015/900170 (PT) | | 1250 | 2500 |
| | | மொத்தம் | 27100 | 54200 |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2023-2024ம் ஆண்டுவரை சொத்து வரி மற்றும் தொழில்வரியினை நிலுவையின்றி செலுத்தியுள்ள காரணத்தினால் சொத்து வரி மற்றும் தொழில்வரியினை கணினி கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம். மேலும் கட்டிடம் இடிக்கப்பட்ட நிலையில் அவ்விடத்திற்கு காலிமனை வரிவிதிப்பு செய்யலாம்.

**(ந.க.எண்.1176/ 2024/ அ1)**

## பொருள் எண். 21

சிறப்பு அலுவலர் முதல்வரின் மனுக்கள் தனிப்பிரிவு, தலைமை செயலகம், சென்னை அவர்களின் கடித ந.க.எண் 946/Sec-4/2023 நாள் 09.11.2023ன்படி அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் பொது மக்களின் குறை தீர்க்கும் முகாம்கள் நடத்தும் பணியினை மக்களுடன் முதல்வர் என்ற தலைப்பில் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையில் கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உத்தேசிக்கப்பட்ட முகாம்கள் நடத்த தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று திருமண மண்டபங்களில் பின்காணும் விபரப்படி முகாம்கள் நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | முகாம் நட த்த வேண்டிய நாள் | முகாம் நடக்கும் இடம் | வார்டு எண்கள் |
|---|---|---|---|
| 1 | 19.12.2023 | கண்ணன் மஹால், சித்தேரி தெரு கள்ளக்குறிச்சி | 1,2 3,4,12,13,14 |
| 2 | 21.12.2023 | VAS மண்டபம், சேலம் மெயின் ரோடு, அண்ணாநகர், கள்ளக குறிச்சி | 5,11,15,18,19,20,21 |
| 3 | 05.01.2024 | மகாலட்ச மி திருமண மண்டபம், சுந்தர விநாய ர் கோயில் தெரு, கள்ளக்குறிச்சி | 6,7,8,9,10,16,17 |

மேற்படி தினங்களில் பொது மக்களிடம் மனுக்கள் பெற கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள இதர துறைகளை சார்ந்த அலுவலர்களை ஒருங்கிணைந்து மனுக்களை பெற்று தீர்வு காணும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி மக்களுடன் முதல்வர் முகாம்கள் நடைபெறும் நாளன்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திருமண மண்டபங்களில் முகாம் நடத்த அனுமதி பெறுதல், அதற்கான செலவினங்களை மேற்கொள்ளுதல், நகராட்சி அலுவலர்கள்/பணியாளர்கள், பொது சுகாதார பிரிவு பணியாளர்கள், இதர துறைசார்ந்த அலுவலர்கள்/சிறப்பு விருந்தினர்கள் மற்றும் இதர அலுவலர்களளுக்கு தேநீர், தின்பண்டங்கள், சிற்றுண்டி, குடிநீர் வசதி மற்றும் உணவு ஏற்பாடுகள் செய்தலுடன் இதர செலவினங்கள் மேற்கொள்ள கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 2891/2023/எப்1 நாள் 17.12.2023ல் வருவாய் ஆய்வர் திரு மு.செந்தில்குமார் என்பவர் பணிகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து கள்ளக்குறிச்சி நகராட்சி வருவாய் ஆய்வாளர் திரு மு.செந்தில்குமார் என்பவர் மேற்படி முகாம் நடைபெறும் நாட்களில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களின் பட்டியல் தொகையான ரூ.149766ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து எழுநூற்று அறுபத்தாறு மட்டும்) வழங்க கோரி கொடுத்துள்ள கடிதம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணியானது பொது மக்களின் கோரிக்கையினை நிறைவேற்றும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட மக்களுடன் முதல்வர் முகாம்கள் என்பதால், பணிகளில் சுணக்கம் இல்லாமல் பணிகள் மேற்கொள்ள வேண்டி, செலவினம் மேற்கொண்டதை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. திரு மு.செந்தில்குமார், வருவாய் ஆய்வர் என்பவரால் மேற்கொள்ளப்பட்ட செலவினத் தொகை ரூ.149766/-ஐ வருவாய் நிதியில் வழங்க நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து காசோலையாக வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண் 2891/2023/எப்1)**

## பொருள் எண். 22

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட ஏமப்பேர் பகுதியில் சர்வே எண் 123/1ல் 4.50 ஏக்கர் பரப்பளவில் குளம் ஒன்று உள்ளது. அக்குளத்தினை கலைஞர் மேம்பாட்டு திட்டம் 2021–2022 நிதியில் குளத்தினை சீரமைத்து சிறுவர் பூங்கா, சிறுவர் நீச்சல் குளம் மற்றும் படகு சவாரி செய்யும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இதற்கான நுழைவுக் கட்டணம் படகு சவாரிக் கட்டணம், நீச்சல் குளத்திற்கான கட்டணம் மற்றும் வண்டி நிறுத்துமிடத்திற்கான கட்டணம் போன்றவற்றிற்கான ரசீதுகளை அச்சிட்டு வழங்க ஏதுவாக உத்தேச செலவினம் ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மேற்கொள்ள நிர்வா அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வீஸ், திருச்சி என்ற நிறுவனத்தில் தேவைப்படும் இரசீதுகளை அச்சடித்து கொள்முதல் செய்ய நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று, பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. இரசீதுகளை அச்சடிக்க ஆகும் செலவினத்தினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 338/2024/அ2)**

## பொருள் எண். 23

கள்ளக்குறிச்சி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–2022ன் கீழ், ரூ. 115.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண். 10, சீத்தாராம் நகர் பகுதியில் நூலகத்துடன் கூடிய அறிவுசார் மையம் கட்டடம் (Type–I) கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டடத்தில் மாணவ / மாணவியர்கள், படித்த இளைஞர்கள் போட்டி தேர்வுக்கு பயிற்சி பெறும் வகையிலும் இணையதள வசதிகளுடன் கூடிய கணினிகள் மற்றும் சுமார் 3000 எண்ணிக்கையிலான புத்தகங்கள் / நூல்கள் அமைப்பதற்கு இடவசதிகள் ஏற்படுத்தப்பட்டு, புத்தகங்கள் / நூல்கள் பெறப்பட்டு உள்ளது.

மேற்படி நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தினை 05.01.2024ம் தேதியன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், அவர்களால் காணொளி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டது. தற்போது பொதுமக்கள் வருகைக்காக தினசரி திறந்து வைக்கப்பட்டுள்ள நிலையில், நூலகத்திற்கு வருவோர்கள் பயன்படுத்தும் கழிவறைகளுக்கு தேவையான பொருட்கள் பிளாஸ்ட்டிக் வாளி, மக், பிரஷ், மாஃப், முகக்கவசம், ரெட் ஆர்ப்பிக், புளூ ஆர்ப்பிக், கைஉரை மற்றும் இதர பொருட்கள் அத்தியாவசிய தேவைக்கு அவ்வப்போது வாங்கிட ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூபாய் (ரூ. 50,000/–) ஐம்பதாயிரம் ஆகும் மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பொருட்கள் கழிவறையை சுத்தம் செய்யும் பயன்பாட்டிற்கான பணியின் அவசர அவசியத்தினை கருதி தேவைக்கேற்ப அவ்வப்போது திருச்சி கூட்டுறவு சொசைட்டி நிறுவனமான, தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வீஸ்–மூலம் பெற்றுக்கொள்ளவும், அதற்கான தொகை வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1318 / 2024 / எப்2)**

## பொருள் எண். 24

சிறப்பு அலுவலர் முதல்வரின் மனுக்கள் தனிப்பிரிவு, தலைமை செயலகம், சென்னை அவர்களின் கடித ந.க.எண் 946/Sec-4/2023 நாள் 09.11.2023ன்படி அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் பொது மக்களின் குறை தீர்க்கும் முகாம்கள் நடத்தும் பணியினை மக்களுடன் முதல்வர் என்ற தலைப்பில் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையில் கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உத்தேசிக்கப்பட்ட முகாம்கள் நடத்த தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று திருமண மண்டபங்களில் பின்காணும் விபரப்படி முகாம்கள் நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | முகாம் நடத்த வேண்டிய நாள் | முகாம் நடக்கும் இடம் | வார்டு எண்கள் |
|---|---|---|---|
| 1 | 19.12.2023 | கண்ணன் மஹால், சித்தேரி தெரு கள்ளக்குறிச்சி | 1,2,3,4,12,13,14 |
| 2 | 21.12.2023 | VAS மண்டபம், சேலம் மெயின் ரோடு, அண்ணாநகர், கள்ளக்குறிச்சி | 5,1,15,18,19,20,21 |
| 3 | 05.01.2024 | மகாலட்சுமி திருமண மண்டபம், சுந்தர விநாயகர் கோயில் தெரு, கள்ளக்குறிச்சி | 6,7,8,9,10,16,17 |

மேற்படி தினங்களில் பொது மக்களிடம் மனுக்கள் பெற கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள சார்ந்த 13 துறைகளை அலுவலர்களை ஒருங்கிணைந்து மனுக்களை பெற்று தீர்வு காணும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி மக்களுடன் முதல்வர் முகாம்கள் நடைபெறும் நாளன்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திருமண மண்டபங்களில் முகாம் நடத்த அனுமதி பெறுதல், மேற்படி, முகாமில் 13 துறைகளுக்கான சேவைகள் குறித்த பேனர்கள் அமைத்தல், தற்காலிக துணிப்பந்தல் அமைத்தல், 13 துறைகளுக்கான மேசை நாற்கலி மற்றும் தடுப்புகள் அமைத்தல், அலங்காரவளைவுகள் அமைத்தல், விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் அச்சடித்தல், மற்றும் மேற்படி, முகாமிற்கு தேவையான இணையதள இணைப்பு, கணினிகள், பிரின்ட்டர்கள், போன்றவைகள் ஏற்பாடு செய்தலுடன் இதர செலவினங்கள் மேற்கொள்ள முன்பணமாக ரூ.3,00,000/-யை (மூன்று இலட்சம்) 19.12.2023 அன்று இவ்வலுவலக BPV NO : 435 நாள்:19.12.2023 அன்று பெறப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து மேற்படி, பணிகளுக்கான செய்யப்பட்ட செலவினங்களுக்கான பட்டியல் தொகை ரூ.3,62,894 -க்கு உரிய ரசீதுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே முன்பணமாக பெறப்பட்ட தொகை ரூ.3,00,000 -க்கு ஈடு செய்து மீதமுள்ள தொகையை வழங்கிடவும் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை பட்டியல் தொகையை பொது செலவினத்தில்லிருந்து செய்யப்பட்டதை ஏற்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணியானது பொது மக்களின் கோரிக்கையினை நிறைவேற்றும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட மக்களுடன் முதல்வர் முகாம்கள் என்பதால், பணிகளில் சுணக்கம் இல்லாமல் பணிகள் மேற்கொள்ள வேண்டி அவசர அவசியம் கருதி செலவினம் மேற்கொண்டதை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. திருமதி அ.அமலின்சுகுணா நகரமைப்பு ஆய்வர் அவர்களுக்கு வழங்கப்பட்ட முன்பணத்தினை ஈடு செய்து மீதமுள்ள தொகையை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 2891/2023/எப்1)

## பொருள் எண். 25

திரு.ஆர்.தங்கவேல் ராஜா நகர், கள்ளக்குறிச்சி என்பவரால் சென்னை தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் இந்நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு எண்.104/2024 என்ற வழக்கிற்கு நகராட்சி சார்பாக எதிர்வாதுரை தாக்கல் செய்து ஆஜராகி வழக்கினை நடத்தி வரும் திரு.லூர்து பவுல் மௌரியா அரசு உயர்நீதிமன்ற வழக்கறிஞர், சென்னை அவர்களால் இவ்வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.15000/- வழங்க வேண்டி கடிதம் அளித்துள்ளார். எனவே, மேற்கண்ட வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.15000/- யை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.806/2024/H1)

## பொருள் எண். 26

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் பயன்படுத்தபடும் கீழ்க்கண்ட விபரப்படி உள்ள அனைத்து வாகனங்களுக்கும் 2024-2025 ஆம் ஆண்டிற்கு காப்பீடு புதுப்பித்தல், தகுதிசான்று பெற கட்டணம், சாலைவரி, பசுமை வரி, மற்றும் வாகனத்தில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை பழுதுநீக்கம் செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள அவ்வப்போது பெறப்படும் பட்டியல்களுக்கு தொகை வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வாகன எண் | வாகன விபரம் |
|---|---|---|
| 1 | TN32AV0727 | 2012/JCB/BEML LIMITED |
| 2 | T32AU1335 | 2012/DUMBER PLACER/ ASHOK LEY LAND |
| 3 | TN32AV0552 | 2012 / LORRY / SHOK LEY LAND |
| 4 | TN38DE2588 | 2023/ASHOK LEY LAND/ROAD SWEEPING MACHINE |
| 5 | TN15ME4936 | LCV |
| 6 | TN15MF1101 | JCB |

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவ்வப்போது பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1141/2024 /எச்1)

## பொருள் எண். 27

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குட்பட்ட துருகம் சாலையில் அமைந்துள்ள நகராட்சியின் நவீன எரிவாயு தகன மேடை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 01.04.2024 முதல் 31.03.2025 வரை ஒரு வருடத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.12.00 லட்சத்திற்கு மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.எச்1/ 691 /2020 )

## பொருள் எண். 28

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையில் தற்போது தென்மேற்கு பருவமழை தொடங்கி உள்ளதால் அதன் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகராட்சி பகுதியில் டெங்கு நோய் கட்டுப்படுத்துவதற்கு அனைத்து குடியிருப்புகளில் உள்ள கழிவுநீர் செப்டிக் டேங்க் ஏர் பைப்பில் கொசுவலை அமைத்து கொசு ஒழிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆய்வு கூட்ட அறிவுரையில் தெரிவிக்கப்பட்டது. அதன்படி இந்நகராட்சி பகுதியில் சுமார் 18000 வீடுகள் உள்ளது. எனவே, மேற்கண்ட பணிக்கு 20000 எண்ணிக்கைகள் கொசு வலைகள் வாங்கி பயன்படுத்தி கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1289–1/2024 /எச்1)**

## பொருள் எண். 29

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையில் தற்போது தென்மேற்கு பருவமழை தொடங்கி உள்ளதால் அதன் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகராட்சி பகுதியில் டெங்கு நோய் பரவாமல் தடுக்க ஏதுவாக முதிர்கொசுக்களை அழிக்க புகைமருந்து அடிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆய்வு கூட்ட அறிவுரையில் தெரிவிக்கப்பட்டது. அதன்படி இந்நகராட்சியில் தற்போது இந்நகராட்சியில் கொசுமருந்து அடிக்கும் இயந்திரம் ( Hand Portable Fogging Machine) அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு இயக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட பணிக்கு புதியதாக கொசுமருந்து அடிக்கும் இயந்திரம் (Hand portable Fogging Machine ) 2 எண்ணிக்கைகள் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1289/2024/எச்1)**

## பொருள் எண். 30

கள்ளக்குறிச்சி நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், பேருந்து நிலையம், தினசரி மார்கெட், அம்மா உணவகம், உழவர் சந்தை, அரசு மருத்துவமனை, பயணியர் மாளிகை, சமுதாய கழிவறைகள், நுண் உரக்களம், நகராட்சி அலுவலகம் மற்றும் பொது இடங்களில் துர்நாற்றம் வீசப்படும் இடத்தில் லெமன் கிராஸ் ஆயில் வாசனை திரவியம் தெளித்து பொது மக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படா வண்ணம் தடுக்கவும், பொது மக்களின் நலன் கருதியும் மேற்கண்ட லெமன் கிராஸ் ஆயில் வாங்கி பயன்படுத்தி கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 962/2024/எச்1)**

## பொருள் எண். 31

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையில் தற்போது தென்மேற்கு பருவமழை தொடங்கி உள்ளதால் தேங்கும் மழைநீரினால் உருவாகும் கொசுக்களால் டெங்கு, மலேரியா மற்றும் சிக்கன்குனியா போன்ற நோய்கள் பரவுவதை தடுக்க வேண்டும் எனவும், மேலும், மாவட்ட தலைநகரமாக உள்ளதால் அவ்வப்போது அமைச்சர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் வருகை புரிவதால் நகரப்பகுதியில் சுகாதார பணிகள் மேற்கொள்ள தேவையான கிருமிநாசினிகளான நீர்த்த சுண்ணாம்பு தூள், பிளிச்சிங்பவுடர், பினாயில் மற்றும் இதர கிருமிநாசினிகள் போதிய அளவில் இருப்பில் வைத்து கொண்டு போர்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள வேண்டும் என ஆய்வு கூட்ட அறிவுரையில் தெரிவிக்கப்பட்டது. அதன்படி மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான கிருமிநாசினிகள் அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ், திருச்சி என்ற நிறுவனத்திடம் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.8.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார பணியின் அத்தியாவசிய கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ் திருச்சி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 668/2024/H1)

## பொருள் எண். 32

கள்ளக்குறிச்சி நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் வாகன எண்.TN32AU1335 என்ற வாகனத்திற்கு தகுதி சான்று கடந்த 08.03.2024 அன்றுடன் முடிவடைந்ததால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுதுநீக்கம் செய்ய உள்ளூர்/ வெளியூர் நிறுவனத்திடம் விலைப்புள்ளி கோரி பழுதுநீக்கம் செய்து, கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு சென்று தகுதி சான்று பெற ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 733/2024 /எச்1)

## பொருள் எண். 33

கள்ளக்குறிச்சி நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் வாகன எண்.TN 32 AV 0552 என்ற வாகனத்திற்கு தகுதி சான்று எதிர்வரும் 11.06.2024 அன்றுடன் முடிவடைவதாலும் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுதுநீக்கம் செய்ய உள்ளூர்/ வெளியூர் நிறுவனத்திடம் விலைப்புள்ளி கோரி பழுதுநீக்கம் செய்து, கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு சென்று தகுதி சான்று பெற ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1108/2024/எச்1)**

## பொருள் எண். 34

இந்நகர்மன்ற தீர்மான எண். 47 நாள்.27.03.2023 ல் கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான நவீன எரிவாயு தகன மேடையில் பிரேதங்கள் எரியூட்டுவதற்கும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள M/s.M.H.T.Engineering Chennai என்ற நிறுவனத்திற்கு கடந்த 01.04.2023 முதல் 31.03.2024 வரை உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது எதிர்வரும் 31.03.2024 அன்றுடன் ஒப்பந்தம் முடிவடைகிறது. மேலும், தற்போது பாராளுமன்ற தேர்தல் 2024 தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததால் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலையில் உள்ளதால், மேற்கண்ட பணிக்கு ஏற்கனவே அளித்துள்ள விலை விகிதத்தில் M/s.M.H.T.Engineering Chennai என்ற நிறுவனத்தினரால் பணிமேற்கொள்ள சம்மதம் கடிதம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்களின் நலன்கருதியும், பணியின் அவசர அவசியம் கருதியும் மேற்கண்ட நிறுவனத்திற்கு துருகம் சாலையில் அமைந்துள்ள நகராட்சியின் நவீன எரிவாயு தகன மேடை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 01.04.2024 முதல் 31.07.2024 வரை நான்கு மாதத்திற்கு நீட்டிப்பு செய்யவும் இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.00 லட்சத்திற்கு மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஏற்கனவே அளித்துள்ள விலைவிகிதத்தில் M/s.M.H.T.Engineering, Chennai என்ற நிறுவனத்தின் மூலம் 01.04.2024 முதல் 31.07.2024 வரை நான்கு மாதத்திற்கு நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.எச்1/ 691 /2020 )**

**பொருள் எண். 35**

நகர்மன்ற தீர்மான எண். 48, நாள்:–23.01.2024 ல் நகராட்சி பகுதியில் டெங்கு, கொரோனா தொற்று மற்றும் இதர நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள தலா தேவைக்கேற்ப நபர்களை தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் ரோஜா C.I.G. மகளிர் குழு, கள்ளக்குறிச்சி என்ற குழுவின் மூலமாக கடந்த 03.01.2024 முதல் 31.03.2024 வரை தேவைக்கேற்ப நபர்களை பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி பெறப்பட்டது.

மேலும், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு ந.க.எண்.பிடி1/1896/2023 நாள்:–13.03.2024 ல் நகராட்சி பகுதியில் டெங்கு, கொரோனா தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள 90 நாட்கள் நீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், துணை இயக்குநர் சுகாதார பணிகள் கள்ளக்குறிச்சி அவர்களின் கடித ந.க.எண்.7549/அ2/2021 நாள்.03.05.2024 தெரிவிக்கப்பட்டுள்ளதில் தற்போது நகராட்சி பகுதியில் அதிக வெயில் காலமாக உள்ளதால் பொதுமக்கள் வீடுகளின் வெளிபுறமாக உள்ள திறந்தவெளி தொட்டிகள் மற்றும் அதிக பாத்திரங்களில் தண்ணீர் சேமித்து வைப்பதாலும், அவ்வப்போது தென்மேற்கு மழை பெய்வதாலும் டெங்கு கொசுப்புழு உருவாக காரணமாக உள்ளது. எனவே, ஒவ்வொரு வார்டுகளுக்கும் இரண்டு நபர் வீதம் பணியில் அமர்த்தி கொசுப்புழு ஒழிப்பு பணிகள் துரிதமாக செயல்படுத்திட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் நலன் கருதியும், பொது சுகாதார நலன் கருதியும் தற்போது இப்பணிக்கு ஏற்கனவே பணிபுரிந்து வரும் ரோஜா C.I.G மகளிர் குழுவின் மூலமாக தேவைக்கேற்ப நபர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ள எதிர்வரும் 06.05.2024 முதல் 31.08.2024 வரை பணியாளர்களை நிர்ணயம் செய்து பணிகள் மேற்கொள்ளவும், இவர்களுக்கு கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட தொகையான நாளொன்றுக்கு ரூ.418/– வீதம் ஊதியம் வழங்கிடவும் இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பாராளுமன்ற தேர்தல் 2024 நன்னடத்தை விதிகள் அமலில் உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் மேற்கண்ட பணிக்கு ஏற்கனவே பணிபுரிந்து வரும் ரோஜா C.I.G மகளிர் குழுவின் மூலமாக 06.05.2024 முதல் 31.08.2024 வரை தேவைக்கேற்ப நபர்கள் மட்டும் பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கியதையும், பணி மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மாவட்ட ஆட்சித்தலைவர் கள்ளக்குறிச்சி அவர்களால் அனுமதிக்கப்பட்ட தொகையான நாளொன்றுக்கு ரூ.418/–வீதம் ஊதியமாக வழங்கவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
4. பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2969 /2021/எச்1)**

**பொருள் எண். 36**

கள்ளக்குறிச்சி நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் வார்டு எண்.20 ல் ஏமப்பேர் குளத்தினை மேம்படுத்தி கலைஞர் நூற்றாண்டு நகராட்சி பூங்கா மற்றும் படகு சவாரி அமைக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவில் பொழுதுபோக்கு அம்சங்களாக பூங்கா, பசுமை மரங்கள், விளையாட்டு உபகரணங்கள், படகு சவாரி, நீச்சல் குளம், இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இப்பணிக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், துறைரீதியான வசூல் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் தற்காலிகமாக பணியாளர்களை நியமனம் செய்யும் பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து, தனியார் ஆட்கொடுப்பு மற்றும் இந்நகராட்சி பகுதியில் உள்ள மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் பராமரிப்பு மேற்கொள்ளும் பணிக்கு 08.02.2024 வியாழக்கிழமை அன்று அறிவிப்பு கோரப்பட்டதில் இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பாரதியார் மகளிர் மன்றம் என்ற மகளிர் சுய உதவி குழு மூலம் சம்மத கடிதம் பெறப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி ஏமப்பேர் கலைஞர் நூற்றாண்டு நகராட்சி பூங்காவில் உள்ள பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தற்காலிகமாக பணியாளர்களை நியமனம் செய்யவும், இவர்களுக்கு கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2023-24ம் ஆண்டின் ஊதிய விலை விகித அடிப்படையில் ஊதியம் வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி, பாரதியார் மகளிர் மன்றம் கள்ளக்குறிச்சி அவர்களின் சம்மத கடிதம் ஏற்று, தேவைக்கேற்ப பணியாளர்களை தற்காலிகமாக நியமனம் செய்ய நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கவும், பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. இவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் கள்ளக்குறிச்சி அவர்களின் ஊதிய விலை விகிதத்தின் அடிப்படையில் ஊதியம் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 567 /2024/எச்1)

## பொருள் எண். 37

கள்ளக்குறிச்சி நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் TN32AV0727 BEML JCB என்ற வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ், மூவிங் காயில், இஞ்ஜின் ஆயில் சர்வீஸ், பேட்டரி மற்றும் இதர பழுதுகள் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு, பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளிகள் 08.03.2024 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | **M/s. அம்மன் JCB ஸ்பேர்ஸ், கள்ளக்குறிச்சி** | 103253.00 |
| 2 | M/s.ஸ்ரீமுருகன் வெல்டிங் ஓர்க்ஸ், கள்ளக்குறிச்சி | 108225.00 |
| 3 | M/s.ஸ்ரீவிநாயகா இன்ஜினியரிங் லேபர் ஓர்க்ஸ், கள்ளக்குறிச்சி | 109499.00 |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் வ.எண்.1 ல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. **அம்மன் JCB ஸ்பேர்ஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை** ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார அவசியத்தை கருதியும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 119 /2023/எச்1)

## பொருள் எண். 38

கள்ளக்குறிச்சி நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் TN32AV0552 என்ற வாகனத்திற்கு புதியதாக இரண்டு டயர்கள் (Size 8.25-16) கொள்முதல் செய்யும் பணிக்கு, பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளிகள் 08.03.2024 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஸ்ரீ அம்மன் டயர்ஸ், கள்ளக்குறிச்சி | 23600.00 |
| 2 | எம்ஆர்எப் டயர்ஸ், கள்ளக்குறிச்சி | 23600.00 |
| 3 | **களஞ்சியம் ஏஜென்சிஸ், கள்ளக்குறிச்சி** | **23200.00** |

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் வ.எண்.3 ல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. **களஞ்சியம் ஏஜென்சிஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை** ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்
3. பணியின் அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார அவசியத்தை கருதியும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 119 /2023/எச்1)

## பொருள் எண். 39

கள்ளக்குறிச்சி நகராட்சியின் பொது பிரிவு, பொது சுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் பணிபுரியும் 46 கடைநிலை பணியாளர்களுக்கு 2024 ஆண்டிற்கு மிதியடி கொள்முதல் செய்யும் பணிக்கு, பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளிகள் 03.01.2024 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ. எண் | திருவாளர்கள்/ நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | **திரு.M.ராமசாமி, ரஞ்சிதா ஷீ மார்ட், கள்ளக்குறிச்சி** | 300.00 |
| 2 | M/s.நீயூ, இலாஹி ஷீ மார்ட், கள்ளக்குறிச்சி | 320.00 |
| 3 | M/s.தரணி ஷீ மார்ட், கள்ளக்குறிச்சி | 310.00 |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் வ.எண்.1 ல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **திரு.M.ராமசாமி, ரஞ்சிதா ஷீ மார்ட் கள்ளக்குறிச்சி** என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்
3. பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2410 /2023/எச்1)**

## பொருள் எண். 40

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.2652/2018/MA1, நாள்.24.08.2022 மற்றும் 09.09.2022. ல் நகராட்சிகளில் 15 ஆண்டுகளுக்கு மேலாக பயன்பாட்டில் உள்ள அரசு வாகனங்களை கழிவு நீக்கம் செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியின் பொது சுகாதாரபிரிவில் 15 ஆண்டுகளுக்கு மேலான கீழ்க்கண்ட விபரப்படி உள்ள வாகனங்களை தானியங்கி பொறியாளர் அரசு தானியங்கி பணிமனை, விழுப்புரம் அவர்களின் அனுமதி பெற்று கழிவு நீக்கம் செய்யவும், அவ்வாறு கழிவுநீக்கம் செய்யப்பட்ட வாகனங்களை முறையாக பதிவுசெய்து பொது ஏலத்திற்கு விட மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வாகன எண் | வாகன விபரம் | வாகனம் கொள்முதல் செய்யப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 1 | TN32Z5242 | Ashok Ley Land – Lorry | 1996 |
| 2 | TN32U8542 | Swaraj Mazda – Lorry | 2005 |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தானியங்கி பொறியாளர் அரசு தானியங்கி பணிமனை, விழுப்புரம் அவர்களின் அனுமதி பெற்று கழிவுநீக்கம் செய்யும் பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. கழிவு நீக்கம் செய்யப்பட்ட வாகனங்களை பொது ஏலம் விடுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1321 /2024/எச்1)**

## பொருள் எண். 41

இந்நகர் மன்ற தீர்மான எண்.104 நாள்.29.05.2023 ல் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17404/2022/எம்–1 நாள்.10.03.2023 ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் நகரப்பகுதியில் உள்ள அரசு பள்ளிகளில் 01 முதல் 5 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் பணிக்கு 05.06.2023 அன்று முதல் ஓராண்டிற்கு M/s.அன்பு மெஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.17404/2022/எம்1 நாள்.30.05.2024 ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறையில் காலை உணவு வழங்கும் ஒப்பந்ததாரரின் ஒப்பந்த காலம் முடிவுற்ற பின்னர் நீட்டிப்பு செய்து கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஏற்கனவே பணி மேற்கொள்ளப்பட்டு வரும் M/s.அன்புமெஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்திற்கு அதே விலைவிகிதத்தில் 05.06.2024 அன்று முதல் ஓராண்டு காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ளவும், பள்ளி மாணவர்களுக்கு உணவு பரிமாறும் பணியாளர்களுக்கு மாதாந்திர மதிப்பூதியம் வழங்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.25.00 லட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதியும், பள்ளி மாணவர்களின் நலன் கருதியும் ஏற்கனவே பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் M/s.அன்புமெஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்தின் மூலம் 05.06.2024 முதல் ஓராண்டு காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து அதே விலை விகித்தில் பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களால் முன்னனுமதி வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 991/2023/எச்1)**

## பொருள் எண். 42

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினசரி சேகரமாகும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம்பிரித்து இந்நகரப்பகுதியில் 3 இடங்களில் உள்ள நுண்ணுயிர் உரக்களம் (**MCC**) ல் தினசரி சேகரமாகும் மக்கும் குப்பையை உரம் தயாரிக்கும் பணியினை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது அவ்வாறு உரம் தயாரிக்கும் பணிக்கு E.M.சொலிவ்ஷன் தற்போது போதிய இருப்பில் இல்லாத காரணத்தினால், மேற்கண்ட பணியில் தொய்வு ஏற்படுகிறது. எனவே, பணியின் அவசர அவசியம் கருதி E.M சொலிவ்ஷன் கிருமிநாசினி கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.6.00 லட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியை ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
3. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1223 /2024/எச்1)**

## பொருள் எண். 43

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள கழிவுநீர் வாய்க்கால் மற்றும் மழைநீர் தேங்கியுள்ள பகுதியில் கொசுபுழு உற்பத்தி அதிகரித்து டெங்கு, சிக்கன்குனியா, மலேரியா மற்றும் பன்றிக்காய்ச்சல் ஆகியவற்றால் பொதுமக்களுக்கு தொற்று நோய் ஏற்பட காரணமாக உள்ளது. மேற்கண்ட இடங்களில் மஸ்கில் கிருமிநாசினி தெளிப்பான் கொண்டு கொசுப்புழுவினை அழிக்க வேண்டியுள்ளது. எனவே, பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் இந்நகராட்சிக்கு தேவையான மஸ்கில் (Maskil) கிருமிநாசினியை கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1214/2024/H1)**

## பொருள் எண். 44

கள்ளக்குறிச்சி நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் வாகன எண். TN32AV0552 என்ற வாகனத்திற்கு தகுதிசான்று பெறும் பொருட்டு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுதுநீக்கம் ஆகிய பணிகள் மேற்கொள்ள பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளிகள் 20.06.2024 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/s. Sri Venkateswara Labour Auto Diesel Works, Kallakurichi | 270650.00 |
| 2 | M/s. Sri Venkatajalapathi Labour auto Diesel works, Emapper | 280500.00 |
| **3** | **M/s.Kannagi Motor Works, Kallakurichi** | **267200.00** |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் வ.எண்.3ல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s.**Kannagi Motor Works, Kallakurichi என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை** ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்
3. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1108 /2024/எச்1)**

## பொருள் எண். 45

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்தில் 2023-2024 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை (Administrative Report) தயார் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.01 / 2024 / சி1)**

## பொருள் எண். 46

கள்ளக்குறிச்சி நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் கழிவுநீர் உறிஞ்சும் வாகன எண். TN32AU1335 என்ற வாகனத்திற்கு தகுதிசான்று பெறும் பொருட்டு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுதுநீக்கம் ஆகிய பணிகள் மேற்கொள்ள பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளிகள் 20.06.2024 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/s. Sri Venkateswara Labour Diesel Works, Kallakurichi | 162600.00 |
| 2 | M/s. Sri Venkatajalapathi Labour auto Diesel works, Emapper | 145400.00 |
| **3** | **M/s.Kannagi Motor Works, Kallakurichi** | **140400.00** |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் வ.எண்.3ல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s.**Kannagi Motor Works, Kallakurichi என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை** ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்
3. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.733 /2024/எச்1)**

## பொருள் எண். 47

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 21 வரை உள்ள பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டபணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.33553/2022/EA2-SWM-18 நாள்.10.01.2023ன் உத்திரவு படி இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள வெளிக்கொணர்வு முகமை (Out Sourcing) அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு M/s.கிரீன் வாரியர் திருவள்ளுர் என்ற நிறுவனத்தின் மூலமாக தினசரி சேகரமாகும் குப்பைகளை மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என தரம்பிரித்து நுண்உரமையத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது.அவ்வாறு பெறப்படும் மக்கும் குப்பைகளை உரமாக்கும் பணிக்கும், மக்காத குப்பைகளை சேகரம் செய்து சிமெண்ட் நிறுவனத்திற்கும் அனுப்ப இந்நகராட்சி தூய்மை பணியாளர்களை கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள தற்போது இந்நகராட்சியில் 23 தூய்மை பணியாளர்கள் மட்டுமே உள்ளனர். இதில் நகரப்பகுதியில் 105.893 கி.மீ உள்ள மழைநீர் வடிகால் சுத்தம் செய்யும் பணிக்கு 10 நபர்களையும், MCC பணிகளுக்கு 8 நபர்களும், பேருந்து நிலையம் சுத்தம் செய்யும் பணிக்கு 5 நபர்களும் ஈடுப்படுத்தப்பட்டு வருகிறது.

இப்பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் உத்திரவு படி மேற்கண்ட பணிக்கு 34 நபர்கள் ஈடுப்படுத்த வேண்டும் உத்திரவிடப்பட்டுள்ளது. ஆனால், தற்போது மேற்கண்ட பணிக்கு குறைவான பணியாளர்களை கொண்டு பணிகள் துரிதமாக செயல்படுத்த இயலவில்லை. இருப்பினும் தினசரி சேகரமாகும் மக்காத குப்பைகளை முறையாக பண்டல் செய்ய முடியாமல் அப்படியே மூட்டை மூட்டையாக கட்டி அடுக்கி வைக்கப்பட்டு அதனை நகராட்சி வாகனத்தினை கொண்டு அரியலூர் மற்றும் டால்மியாபுரம் டால்மியா சிமெண்ட் நிறுவனத்திற்கு சராசரியாக 247 கி.மீ சென்று வரப்படுகிறது. இதற்கு எரிபொருள் செலவினம் ஒரு நடைக்கு சராசரியாக 50 லிட்டர் முதல் 60 லிட்டர் தொகைரூ.6000 வரை செலவினம் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், அக்குப்பைகளை வாடகை வாகனத்தின் மூலமாக கொண்டு செல்ல ஒரு நடைக்கு ரூ.15500/– செலவினம் ஏற்படுகிறது. இருப்பினும் அக்குப்பைகளை கொண்டு செல்லப்பட்டு வருகிறது. ஆனால், சிமெண்ட் நிறுவனம் பராமரிப்பு பணிக்காக 10 நாட்கள் முதல் 15 நாட்கள் மூடப்படுவதால் தினசரி சேகரமாகும் மக்காத குப்பைகள் மலைப்போல் குவிந்துள்ளதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசப்படுவதோடு மட்டுமில்லாமல் அவ்வப்போது சமூக விரோதிகளால் தீ வைக்கப்படுகிறது. இதனால் மேற்கண்ட குப்பைகளை சிமெண்ட் நிறுவனத்திற்கு கொண்டு செல்வதில் சிக்கல் ஏற்படுகிறது. எனவே, மேற்கண்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு M/s.முருகப்பா டிரேடர்ஸ், மாசிநாயக்கன்பட்டி, வாழப்பாடி என்ற நிறுவனத்தின் மூலமாக அனைத்து நுண்உரமையத்தினை கூடுதலாக பணியாளர்களை அமர்த்தி உரம் தயாரிக்கும் பணிகள், மக்காத மறுசுழற்சிக்கு பயன்படாத குப்பைகளை சிமெண்ட் நிறுவனத்திற்கு வாடகை வாகனத்தின் மூலமாக கொண்டு செல்ல ஒரு கிலோவிற்கு ரூ.1/–வீதம் வழங்கவும், மேற்கண்ட பணிகளுக்கு M/s முருகப்பா டிரேடர்ஸ் மூலமாகவே கூடுதலாக பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதியம், வாடகை வாகனத்திற்கான தொகை அனைத்தும் மேற்கொள்ள வேண்டும் என புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) செய்து 10.07.2024 முதல் 09.07.2025 வரை ஓராண்டு பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அனைத்து நுண்உரமையத்திலும் உரம் தயாரிக்கும் பணிகள் மற்றும் மக்காத மறுசுழற்சிக்கு பயன்படாத குப்பைகளை M/s.முருகப்பா டிரேடர்ஸ், வாழப்பாடி என்ற நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மக்காத மறுசுழற்சிக்கு பயன்படாத குப்பைகளை M/s முருகப்பா டிரேடர்ஸ் வாழப்பாடி என்ற நிறுவனத்தின் மூலமாக கொண்டு செல்ல ஒரு கிலோ ரூ.1/–வீதம் நகராட்சி மூலம் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று 10.07.2024 முதல் 09.07.2025 வரை ஓராண்டிற்கு பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்
5. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2024/எச்1)**

## பொருள் எண். 48

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.16ல் சேரலி நகர் தெருவில் உள்ள சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டு சுமார் 15 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. தற்போது இச்சாலை மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு மிகவும் சிரமமாக ஏற்படுகிறது. எனவே, இத்தெருவில் பழுதடைந்த சிமெண்ட் சாலை மறுசீரமைப்பு பணிகள் செய்து தர வேண்டி 16–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பகுதியில் உள்ள பொதுமக்களின் போக்குவரத்துக்கு உகந்த வகையில் அப்பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்வது மிகவும் அவசிய தேவையாக அமைகிறது.

எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.11,00,000/–(ரூபாய் பதினோறு இலட்சம் மட்டும்)–க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதி அல்லது ஏதேனும் ஒரு திட்டநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2743/ 2023 / இ1)**

## பொருள் எண். 49

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.16ல் பாரதி நகர் தெருவில் மழைநீர் வடிகால் வாய்கால் வசதிகள் இல்லாமல் உள்ளது. இதனால் கழிவுநீர் முறையாக செல்லாமலும், அவ்வப்போது மழைநீர் சாலையில் தேங்கியும் சாலைகள் சேதமடைகிறது. மேலும், அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு சுகாதாரகேடு ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே, இப்பகுதியில் மழைநீர் வடிகால் வாய்கால் மற்றும் சிறுபாலம் அமைத்து தர வேண்டி 16–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் 12.06.2024ம் தேதிய கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பகுதியில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்படி அப்பகுதியில் மழைநீர் வடிகால் வாய்கால் மற்றும் சிறுபாலங்கள் இரண்டு ஆகியவை அமைக்கும் பணிகள் மேற்கொள்வது மிகவும் அவசிய தேவையாக அமைகிறது.

எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.5,20,000/–(ரூபாய் ஐந்து இலட்சத்து இருபதாயிரம் மட்டும்)–க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதி அல்லது ஏதேனும் ஒரு திட்டநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1324/ 2024 / இ1)**

## பொருள் எண். 50

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01ல் வி.ஐ.பி கார்டன் பகுதியிலிருந்து பசுங்காயமங்கலம் சாலை வரை அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால் வாய்கால் சேதமடைந்து வடிகாலில் முறையாக வெளியேற வழிவகை இல்லாமல் உள்ளது. இதனால் கழிவு நீர் முறையாக செல்லாமலும், அவ்வப்போது மழைநீர் சாலையில் தேங்கி சாலைகள் சேதமடைகிறது. மேலும், அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு சுகாதாரகேடு ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே, இப்பகுதியில் மழைநீர் வடிகால் வாய்கால் முறையாக செல்லும் வகையில் அவ்வடிகால் வாய்காலை மோரைபாதை வடிகால் வாய்காலுடன் இணைக்கும் வகையில் இடைப்பட்ட பகுதியில் வடிகால் கட்டமைப்பு வசதிகள் செய்து தர வேண்டி 01–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் 02.07.2024ம் தேதிய கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பகுதியில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்படி அப்பகுதியில் மழைநீர் வடிகால் வாய்கால் அமைக்கும் பணிகள் மேற்கொள்வது மிகவும் அவசிய தேவையாக அமைகிறது.

எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.3,50,000/–(ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதி அல்லது ஏதேனும் ஒரு திட்டநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1448 / 2024 / இ1)**

## பொருள் எண். 51

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01ல் கிருஷ்ணா நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால் வாய்க்கால் சேதமடைந்து வடிகாலில் முறையாக வெளியேற வழிவகை இல்லாமல் உள்ளது. இதனால் கழிவு நீர் முறையாக செல்லாமலும், அவ்வப்போது மழைநீர் சாலையில் தேங்கி சாலைகள் சேதமடைகிறது. மேலும், அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு சுகாதாரகேடு ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே, இப்பகுதியில் மழைநீர் வடிகால் வாய்க்கால் முறையாக செல்லும் வகையில் அவ்வடிகால் வாய்க்காலை அகற்றி சிறுபாலத்துடன் கூடிய புதியதாக வடிகால் வசதி கட்டமைப்பு செய்து தர வேண்டி 01–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் 26.06.2024ம் தேதிய கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பகுதியில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்படி அப்பகுதியில் சிறுபாலத்துடன் கூடிய மழைநீர் வடிகால் வாய்க்கால் அமைக்கும் பணிகள் மேற்கொள்வது மிகவும் அவசிய தேவையாக அமைகிறது.

எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.4,00,000/–(ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்)–க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதி அல்லது ஏதேனும் ஒரு திட்டநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1399 / 2024 / இ1)**

## பொருள் எண். 52

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11ல் காசிம் சாயுப் கொள்ளை தெருவில் ஏற்கனவே, உள்ள சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் வாய்க்கால் சேதமடைந்து உள்ளது. இதனால் பொதுமக்களின் போக்குவரத்துக்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது. மேலும் கழிவுநீர் முறையாக செல்லாமலும், அவ்வப்போது சாலையில் தேங்கியும் சாலைகள் சேதமடைகிறது. மேலும், அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு சுகாதாரகேடு ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே, இப்பகுதியில் சேதமடைந்த சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் வாய்க்கால் ஆகிவற்றை மறுசீரமைப்பு பணிகள் செய்து தர வேண்டி 11–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் 25.06.2024ம் தேதிய கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பகுதியில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்படி சேதமடைந்த சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் வாய்க்கால் ஆகிவற்றை மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்வது மிகவும் அவசிய தேவையாக அமைகிறது.

எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.8,50,000/–(ரூபாய் எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதி அல்லது ஏதேனும் ஒரு திட்டநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1369 / 2024 / இ1)**

## பொருள் எண். 53

கள்ளக்குறிச்சி நகராட்சியில் வருவாய்நிதி 2023–2024ன் கீழ், கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 13.06.2024–ம் தேதி அன்று (E–Tender) முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே எண்.157/3ல் புதிய நகராட்சி அலுவலக கட்டடம் அமைத்தல் | ரூ. 4,50,00,000/– | M/s ஸ்ரீ ராம் கன்ஸ்ட்ரகஷ்ன்ஸ் கள்ளக்குறிச்சி | 0.03% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு.எம்.எம். ரவி, கள்ளக்குறிச்சி | 3.08% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டைவிட 0.03% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **M/s ஸ்ரீ ராம் கன்ஸ்ட்ரகஷ்ன்ஸ்,** கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 581 / 2022 / இ1)

## பொருள் எண். 54

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.12ல் மந்தவெளி பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பொதுகூட்ட மேடை அமைக்கப்பட்டு பல ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. தற்போது இப்பொதுகூட்ட மேடை மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. மேலும், இப்பொதுகூட்ட மேடையை புணரமைப்பு பணிகள் செய்து மேம்படுத்த வேண்டி பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து தொடர்ந்து கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளது. எனவே, மேற்படி பழுதடைந்த நகராட்சி பொதுகூட்ட மேடையை புணரமைப்பு பணிகள் மேற்கொள்வது மிகவும் அவசிய பணியாக உள்ளது.

எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.8,00,000/–(ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்)–க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதி அல்லது ஏதேனும் ஒரு திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1406 / 2024 / இ1)

## பொருள் எண். 55

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான நாளங்காடி கடைகள் மற்றும் பேருந்து நிலைய கடைகள் ஏற்கனவே பொது ஏலத்தில் விடப்பட்டு குத்தகைக்கு விடப்பட்ட கடைகள், பொது ஏலம் விடப்படாத கடைகள் மற்றும் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்து பாதியிலேயே கடைகளை விட்டு விட்டு சென்ற கடைகளின் நிலுவைத்தொகையினை செலுத்தாத கடைகளை பூட்டி சீல் வைக்கப்பட்ட கடைகள் என காலியாக உள்ள கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விட கீழ்க்கண்டவாறு வைப்புத்தொகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**1.நாளங்காடி கடைகள், குளக்கரை கடைகள், பேருந்து நிலைய கடைகள், சமுதாய கூடங்கள்**

| வ. எண் | ஏல இனங்களின் விபரம் | 01.01.2024க்கு பின்னர் பெறப்பட வேண்டிய அசல் சொத்து மதிப்பு சான்று ரூ | அசல் சொத்து மதிப்பு சான்றுடன் செலுத்த வேண்டிய வைப்புத் தொகை ரூ | அசல் சொத்து மதிப்பு சான்றினை பெறாதவர்கள் செலுத்த வேண்டிய வைப்புத் தொகை ரூ |
|---|---|---|---|---|
| 1 | நாளங்காடி கடைகள் | 100000 | 10000 | 25000 |
| 2 | நடுத்தர கடைகள் | 25000 | 5000 | 10000 |
| 3 | சிறிய கடைகள் | 25000 | 5000 | 10000 |
| 4 | குளக்கரை கடைகள் | 500000 | 100000 | 200000 |
| 5 | பேருந்து நிலைய கிழக்குப்புற புதிய கடைகள் | 200000 | 25000 | 50000 |
| 6 | பேருந்து நிலைய வெளிப்புற கடைகள் | 200000 | 25000 | 50000 |
| 7 | பேருந்து நிலைய பழைய கடைகள் | 200000 | 25000 | 50000 |
| 8 | பேருந்து நிலைய வடபுற கடைகள் | 200000 | 25000 | 50000 |
| 9 | தற்காலிக கடைகள் | 50000 | 5000 | 10000 |

**2.நகராட்சிக்கு சொந்தமான சமுதாய கூடம் தினசரி வாடகை**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | கரியப்பா நகர் சமுதாய கூடம் | -- | 3000 | -- |
| 2 | கருணாபுரம் காலனி சமுதாய கூடம் | -- | 2000 | -- |
| 3 | ஏமப்பேர் காலனி சமுதாய கூடம் | -- | 1000 | -- |

3.பேருந்து நிலைய கடைகள், நாளங்காடி தற்காலிக கடைகள், ஏமப்பேர் சிறுவர் பூங்கா

| வ. எண் | ஏல இனங்களின் விபரம் | 01.01.2024க்கு பின்னர் பெறப்பட வேண்டிய அசல் சொத்து மதிப்பு சான்று ரூ | அசல் சொத்து மதிப்பு சான்றுடன் செலுத்த வேண்டிய வைப்புத் தொகை ரூ | அசல் சொத்து மதிப்பு சான்றினை பெறாதவர்கள் செலுத்த வேண்டிய வைப்புத் தொகை ரூ |
|---|---|---|---|---|
| 1 | பேருந்து நிலையத்தில் உள்ள புதியதாக கட்டப்பட்ட மீன் கடைகள் | 500000 | 100000 | 250000 |
| 2 | நாளங்காடி கட்டண கழிவறை கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 200000 | 50000 | 100000 |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஆண்டு குத்தகை இனங்களில் வரிசை எண் 2ல் உள்ள நாளங்காடி கட்டண கழிப்பிடம் வைப்புத்தொகை ஏற்கனவே அசல் சொத்து மதிப்பு சான்று இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய வைப்புத்தொகை ரூ.2,00,000/- இருந்து ஏலம் கோரப்பட்டதில் மேற்படி கட்டண கழிப்பறைக்கு யாரும் ஏலம் கோர முன்வரவில்லை. எனவே தற்போது வரையில் துறை ரீதியாக வசூலிக்கப்பட்டு வருவதால், நகராட்சியின் நிதியிழப்பினை கருத்தில் கொண்டு வைப்புத்தொகை ரூ.1,00,000/- என குறைத்து நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3. நகராட்சியின் வருவாயினை கருத்தில் கொண்டு அனைத்து இனங்களுக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அங்கீகரிக்கலாம்.
4. மேற்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரும் விளம்பர செலவினத்திற்கு வரப்பெறும் செலவினத்தை பட்டியல் படி தொகையை நகராட்சி வருவாய் நிதியில் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்      /2024/அ2)**

## பொருள் எண். 56

கள்ளக்குறிச்சி நகராட்சி அனைத்து பிரிவுகளுக்கும் அலுவலக பணிக்காக தேவைப்படும் பதிவேடுகள், படிவங்கள், A4 பேப்பர், லீகல் பேப்பர் மற்றும் எழுது பொருட்கள் 2024-2025 நிதியாண்டிற்கு தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ், திருச்சி என்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண்.1257/2024/டி1)**

## பொருள் எண்.57

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் 2022–2023 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் போது கீழ்க்காணும் அறிவிப்பு செய்யப்பட்டது. "சாலையோர வியாபாரிகளுக்கானத் திட்டம் (Street Vendors Welfare) தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அடையாள அட்டை வழங்கப்பட்டு, அவர்கள் எவ்வித சிரமும் இன்றி வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படும்."

இதனைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர். சென்னை–28 அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA1. நாள்.16.06.2022ல், தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் சாலையோர வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015–ன்படி கணக்கெடுப்பு செய்து அவர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச் சான்று தயார் செய்து வழங்குதல் மற்றும் விற்பனைத் திட்டம் தயார் செய்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டதைத் தொடர்ந்து, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகளின் கணக்கெடுப்பு நடைபெற்றதில், மொத்தம் 322 நபர்கள் உள்ளனர் எனக் கண்டறியப்பட்டு. மேற்படி நபர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச் சான்றும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை–28 அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA. நாள்.07.06.2024ல் தற்போது சாலையோர வியாபாரிகளின் கணக்கெடுப்புப் பணி முடிவுற்றதால், தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் விதிகள் 2015, அத்தியாயம் IV–ன்படி, நகர விற்பனைக் குழு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் சாலையோர வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015, அத்தியாயம் IV– ன்படி, நகர விற்பனைக் குழு அமைக்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவில் தலைவருடன் சேர்த்து மொத்தம் 15 உறுப்பினர்கள் அடங்குவர்.

| | | |
|---|---|---|
| நகராட்சி ஆணையர் | – | 1 (தலைவர்) |
| மருத்துவ அலுவலர் | – | 1 |
| காவல் அலுவலர்கள் (சட்ட ஒழுங்கு மற்றும் போக்குவரத்து காவல் அலுவலர் உள்பட) | – | 2 |
| நகராட்சியின் ஏதேனும் ஒரு அலுவலர் | – | 1 |
| சாலையோர வியாபாரிகளின் பிரதிநிதிகள் | – | 6 |
| வணிகர் சங்கப் பிரதிநிதிகள் | – | 1 |
| அரசு சாரா மற்றும் சமூதாய அமைப்பின் பிரதிநிதிகள் | – | 2 |
| குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதிகள் | – | 1 |

மேற்கண்ட 14 உறுப்பினர்களில் 8 உறுப்பினர்களை (சாலையோர வியாபாரிகள் தவிர்த்து) சம்மந்தப்பட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும். மீதம் உள்ள 6 உறுப்பினர்களை மட்டும் கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ள தெருவோர வியாபாரிகள் 322 நபர்களுக்கிடையே தேர்தல் நடத்தி தேர்தல் மூலம் 6 உறுப்பினர்களை தேர்வு செய்ய வேண்டும் எனவும், அவர்கனை கீழ்காணும் விவரப்படி தேர்வு செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (1) | ஆதிதிராவிடர் | : | 1 |
| (2) | இதர பிற்படுத்தப்பட்டோர் | : | 1 |
| (3) | மகளிர் | : | 1 |
| (4) | மாற்றுத்திறனாளி | : | 1 |
| (5) | சிறுபான்மையினர் | : | 1 |
| (6) | பொது | : | 1 |

மேலும், மேற்கண்ட தேர்தல் நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம் குறித்து நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என மேற்கண்ட விதிகளில் விதி எண்.13(3) ல் குறிப்பிடப்பட்டுள்ளது. நகர் மன்ற தீர்மானம் நிறைவேற்றிய பின்பு தேர்தல் நடத்தி அதன் மூலம் 6 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நகர விற்பனைக் குழுவில் இடம் பெறவுள்ள 6 தெருவோர வியாபாரிகளை உறுப்பினர்களாக தேர்வு செய்வதற்கான தேர்தலை கீழ்க்காணும் விபரப்படி நடத்த நகர்மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

தேர்தல் நடைபெறும் இடம்:– நகராட்சி அலுவலகம், கள்ளக்குறிச்சி.

| தேர்தல் விவரப்பட்டியல் | | நாள் | நேரம் |
|---|---|---|---|
| தேர்தல் அறிவிக்கை வெளியிடுதல் | | 17.07.2024 | |
| வேட்பு மனுக்கள் பெறுதல் | | 29.07.2024 முதல் 30.07.2024 வரை | காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை |
| வேட்பு மனுக்கள் பரிசீலனை | | 02.08.2024 | காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை |
| வேட்பு மனுக்கள் (வாபஸ்) திரும்ப பெறுதல் | | 05.08.2024 | பிற்பகல் 3.00 மணி வரை |
| வாக்குப் பதிவு நடைபெறும் நாள் | | 13.08.2024 | காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை |
| வாக்குஎண்ணிக்கை நடைபெறும் நாள் | | 13.08.2024 | மாலை 6 மணிக்கு நடைபெறும். |

**அலுவலக குறிப்பு**

1. நகர தெருவோர வியாபார குழு தோற்றுவிக்கவும், மேற்குறிப்பிட்ட அட்டவணையின்படி தேர்தல் நடத்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தேர்தல் தொடர்பாக ஆகும் செலவினங்களை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3. தேர்தல் அறிவிக்கையினை தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் பிரசுரம் செய்ய ஆகும் செலவினங்களை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண்.        / 2024 / எப்1)**

## பொருள் எண். 58

சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு எண். WP–11143/2024–ல் திரு.A.ராமு, என்பவரால் கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் அனுமதியின்றி சட்டத்திற்கு புறம்பாக வணிகவளாக கட்டிடம் கட்டுவதால் பொது நல வழக்கு தொடர்ந்துள்ளார், அதில் 2ம் பிரதிவாதியாக இந்நகராட்சி ஆணையாளரை சேர்க்கப்பட்டுள்ளதால். கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையாளர் சார்பாக சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி.ஸ்ரீனிவாஸ் அவர்களை வழக்கில் ஆஜராகி வழக்கினை நடத்திடவும், வழக்கிற்காகும் செலவினத்தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்புறிப்பு :–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வழக்கின் அவசர அவசியத்தினை கருதி சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி.ஸ்ரீனிவாஸ் அவர்களை நகராட்சி சார்பாக வழக்கில் ஆஜராகி வழக்கினை நடத்திட ஒப்படைத்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**( ந.க. எண்.1457 / 2024 / எப்–1 )**

## பொருள் எண். 59

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19–ல் உள்ள அண்ணாமலை நகர், கரியப்பா நகர் 1வது தெரு மற்றும் 2வது தெரு மற்றும் பெரியயி கோவில் தெரு ஆகிய பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு 1¼ GI பைப் அமைத்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பகுதியில் உள்ள குழாய்கள் அமைக்கப்பட்டு பத்தாண்டுகளுக்கு மேல் ஆகிறது தற்போது இக்குழாய்களில் ஆங்காங்கே பழுதுகள் ஏற்பட்டு குடிநீர் வீன் ஆவதோடு தடையின்றி குடிநீர் வழங்குவது மிகவும் சிரமம் ஏற்படுகிறது.

மேலும், மேற்படி பகுதியில் உள்ள குடிநீர் விநியோக குழாய்களை UPVC குழாய்யாக மாற்றி அமைத்து தர வேண்டி 19–வது நகர்மன்ற உறுப்பினர், அவர்களின் 10.06.2024ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். எனவே, மேற்படி பகுதியில் உள்ள GI குடிநீர் விநியோக குழாய்களை UPVC குழாய்யாக மாற்றியமைக்கும் பணிகள் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது.

எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ2,70,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து எழபதாயிரம் மட்டும்)–க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிகலாம்.
2. தொகையினை குடிநீர் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1268 / 2024 / இ2)

## பொருள் எண். 60

கள்ளக்குறிச்சி நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2023 பிரிவு 57 (7) ன் கீழ், கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 24.06.2024 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப் புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சி குடிநீர் லாரி வாகனம் எண். TN 32 P 3612 க்கு பழுதுகள் நீக்கி, தகுதி சான்று புதுப்பித்தல் பணி மேற்கொள்ளுதல் | M/s. கண்ணகி மோட்டார் ஒர்க்ஸ், கள்ளக்குறிச்சி | ரூ. 1,76,500/– |
| | | M/s.ஸ்ரீ வெங்கடஜலபதி, லேபர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ். கள்ளக்குறிச்சி | ரூ. 1,81,150/– |
| | | M/s.ஸ்ரீ வெங்கடேஸ்வரா, லேபர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ். கள்ளக்குறிச்சி | ரூ. 1,81,900/– |

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் விலைப்புள்ளிகளில் ரூ.1,76,500./–க்கு குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s.கண்ணகி மோட்டார் ஒர்க்ஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.கண்ணகி மோட்டார் ஒர்க்ஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்தாருக்கு வேலை உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
4. மேற்படி பணிக்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2023 பிரிவு 57(7) ன் கீழ் செலவுத் தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 3105 / 2021 / இ2)

## பொருள் எண். 61

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வார்டு எண்.20ல் ஏமப்பேர் குளத்தினை கலைஞர் புறமேம்பாட்டு திட்டம் 2021-2022ன் கீழ் மேம்படுத்தி கலைஞர் நூற்றாண்டு நகராட்சி பூங்காவில் பொழுதுபோக்கு அம்சங்களாக பூங்கா, பசுமை மரங்கள், விளையாட்டு உபகரணங்கள், படகு சவாரி, நீச்சல் குளம், இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி, பூங்காவை பொதுமக்கள் தடையின்றி பயன்படுத்த ஏதுவாக அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து தொடர்ந்து பயன்படுத்தும் வகையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.5,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1537 / 2024 / இ1)**

## பொருள் எண். 62

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.15ல் இரஜபுத்திர தெருவில் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால் வாய்கால் சேதமடைந்து உள்ளது. இதனால் கழிவுநீர் முறையாக செல்லாமலும், அவ்வப்போது சாலையில் தேங்கி அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு சுகாதாரகேடு ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே, இப்பகுதியில் சேதமடைந்த மழைநீர் வடிகால் வாய்கால் மறுசீரமைப்பு பணிகள் செய்து தர வேண்டி 15-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் 02.07.2024ம் தேதிய கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பகுதியில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்படி சேதமடைந்த மழைநீர் வடிகால் வாய்கால் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்வது மிகவும் அவசிய தேவையாக அமைகிறது.

எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.5,75,000/-(ரூபாய் ஐந்து இலட்சத்து ஏழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்)-க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதி அல்லது ஏதேனும் ஒரு திட்டநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1523 / 2024 / இ1)

## பொருள் எண். 63

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 07 வரையில் 114-க்கும் பகுதியில் மேற்பட்ட சிறுமின் விசைப்பம்புகள் உள்ளன. இதனை பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர். இதில் சில ஆழ்துளை கிணறுகளிலிருந்து தண்ணீர் குடிநீர் பகிர்மான குழாய்களுக்கு கொண்டு சென்று விநியோகம் செய்யப்படுகிறது. இந்த அமைப்பில் மோட்டார், குழாய்கள், பேனல் போர்டுகள், கன்டன்சர், பி.வி.சி. மேல் நிலை தொட்டிகள் மற்றும் இதர உபகரணங்கள் உள்ளன. இவற்றில் ஏதேனும் பழுதடைந்தால் இதனை உடனடியாக சரிசெய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

நகராட்சி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதில் எவ்வித தடையும் இன்றி குடிநீர் வழங்கிட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இப்பணி நகராட்சியில் அத்தியவசிய தேவை பணியில் ஒன்றாகவும் உள்ளது.

எனவே, மேற்கண்ட தண்ணிர் விநியோக பணிகளில் உதிரி பாகங்களுடன் கூடிய பணிகள் செய்ய வேண்டியுள்ளது. குடிநீர் விநியோக பணிகளின் முக்கியத்துவத்தினை கருதி, பொதுமக்களுக்கு தங்கு, தடையின்றி குடிநீர் வழங்குவதற்கு 2024–2025 ஆம் ஆண்டிற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7,00,000/– (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்)–க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1532 / 2024 / இ2)**

## பொருள் எண். 64

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 08 முதல் 14 வரை 89க்கும் பகுதியில் மேற்பட்ட சிறுமின் விசைப்பம்புகள் உள்ளன. இதனை பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர். இதில் சில ஆழ்துளை கிணறுகளிலிருந்து தண்ணீர் குடிநீர் பகிர்மான குழாய்களுக்கு கொண்டு சென்று விநியோகம் செய்யப்படுகிறது. இந்த அமைப்பில் மோட்டார், குழாய்கள், பேனல் போர்டுகள், கன்டன்சர், பி.வி.சி. மேல் நிலை தொட்டிகள் மற்றும் இதர உபகரணங்கள் உள்ளன. இவற்றில் ஏதேனும் பழுதடைந்தால் இதனை உடனடியாக சரிசெய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

நகராட்சி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதில் எவ்வித தடையும் இன்றி குடிநீர் வழங்கிட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இப்பணி நகராட்சியில் அத்தியவசிய தேவை பணியில் ஒன்றாகவும் உள்ளது.

எனவே, மேற்கண்ட தண்ணிர் விநியோக பணிகளில் உதிரி பாகங்களுடன் கூடிய பணிகள் செய்ய வேண்டியுள்ளது. குடிநீர் விநியோக பணிகளின் முக்கியத்துவத்தினை கருதி, பொதுமக்களுக்கு தங்கு, தடையின்றி குடிநீர் வழங்குவதற்கு 2024–2025 ஆம் ஆண்டிற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7,00,000/– (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்)–க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1533 / 2024 / இ2)**

## பொருள் எண். 65

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 15 முதல் 21 வரையில் பகுதியில் 105–க்கும் மேற்பட்ட சிறுமின் விசைப்பம்புகள் உள்ளன. இதனை பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர். இதில் சில ஆழ்துளை கிணறுகளிலிருந்து தண்ணீர் குடிநீர் பகிர்மான குழாய்களுக்கு கொண்டு சென்று விநியோகம் செய்யப்படுகிறது. இந்த அமைப்பில் மோட்டார், குழாய்கள், பேனல் போர்டுகள், கன்டன்சர், பி.வி.சி. மேல் நிலை தொட்டிகள் மற்றும் இதர உபகரணங்கள் உள்ளன. இவற்றில் ஏதேனும் பழுதடைந்தால் இதனை உடனடியாக சரிசெய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

நகராட்சி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதில் எவ்வித தடையும் இன்றி குடிநீர் வழங்கிட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இப்பணி நகராட்சியில் அத்தியவசிய தேவை பணியில் ஒன்றாகவும் உள்ளது.

எனவே, மேற்கண்ட தண்ணிர் விநியோக பணிகளில் உதிரி பாகங்களுடன் கூடிய பணிகள் செய்ய வேண்டியுள்ளது. குடிநீர் விநியோக பணிகளின் முக்கியத்துவத்தினை கருதி, பொதுமக்களுக்கு தங்கு, தடையின்றி குடிநீர் வழங்குவதற்கு 2024–2025 ஆம் ஆண்டிற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7,00,000/– (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்)–க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1534 / 2024 / இ2)**

## பொருள் எண். 66

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 21 வரையில் பகுதியில் 310–க்கும் மேற்பட்ட சிறுமின் விசைப்பம்புகள் உள்ளன. இதனை பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர். இதில் சில ஆழ்துளை கிணறுகளிலிருந்து தண்ணீர் குடிநீர் பகிர்மான குழாய்களுக்கு கொண்டு சென்று விநியோகம் செய்யப்படுகிறது. இந்த அமைப்பில் மின்மோட்டார்களில் ஏதேனும் பழுது ஏற்பட்டு பயன்படுத்த இயலாத நிலைக்கு உள்ளாகும் மின்மோட்டார்களுக்கு பதிலாக புதியதாக மின்மோட்டார் பொருத்தி சரிசெய்து தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, குடிநீர் விநியோக பணிகளின் முக்கியத்துவத்தினை கருதி, பொதுமக்களுக்கு தங்கு, தடையின்றி குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக தேவையான மின்மோட்டார்கள் கொள்முதல் செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9,00,000/–(ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்)–க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1535 / 2024 / இ2)**

## பொருள் எண். 67

கள்ளக்குறிச்சி நகராட்சியில், வருவாய் நிதி 2023-2024ன் கீழ், கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு 29.02.2024-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | அண்ணா நகர் தென்கீரனூர் சாலை பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்களை மறுசீரமைப்பு செய்தல். (வார்டு எண்.17) | ரூ. 15,00,000/- | M/s AS கன்ஸ்ட்ரகஷன்ஸ் கள்ளக்குறிச்சி | 0.02% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. N.செங்கோட்டையன். கள்ளக்குறிச்சி | 2.32% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | நகராட்சி பேருந்து நிலையத்தின் உள்ளே தெற்கு பகுதியில் காலியாக உள்ள இடத்தில் இறைச்சி கடைகள் அமைத்தல். | ரூ. 9,90,000/- | திருமதி. M.செல்லம்மாள், கள்ளக்குறிச்சி | 0.13% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திருமதி. M.சரோஜா. கள்ளக்குறிச்சி | 3.12% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3. | ஸ்ரீ ராஜா ராஜேஸ்வரி நகர் மற்றும் மணிமேகலை நகர் பகுதியில் உள்ள சிறுபாலம் மறுசீரமைப்பு செய்தல். (வார்டு எண்.10) | ரூ. 2,35,000/- | திருமதி.S.பத்மா கள்ளக்குறிச்சி | 0.05% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 2.39% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணியின் அவரச அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கிய ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
4. பட்டியல்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2354/ 2023 / இ1)

## பொருள் எண். 68

கள்ளக்குறிச்சி நகராட்சியில், வருவாய் நிதி 2023-2024ன் கீழ், கீழ்க்காணும் பணிக்கு 16.02.2024-ம் தேதி அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | விலைப்புள்ளி வழங்கியவர் பெயர் | விலைப்புள்ளி தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சிக்கு சொந்தமான நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு தேவையான குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் (ஒரு மணி நேரத்திற்கு 50 லிட்டர் கொள்ளளவு) கொள்முதல் செய்தல் | ரூ. 1,50,000/- | M/s. Adhav Solutions, Villupuram | ரூ. 1,49,000/- 0.33% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. Sri Vela Enterprises, Kallakurichi | ரூ. 1,52,000/- 1.67% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| | | | M/s. Akalya Systems Villupuram | ரூ. 1,51,000/- 1.34% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் விலைப்புள்ளிகளில் ரூ.1,49,000/-க்கு குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s. Adhav Solutions, Villupuram என்ற நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளிகள் அளித்த M/s. Adhav Solutions, Villupuram என்ற நிறுவனத்தாருக்கு வழங்கல் உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
4. பட்டியல்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 033 / 2024 / இ1)**

## பொருள் எண். 69

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 6450 / 2024 / SBM-1(1), நாள்.14.03.2024-ல், தூய்மை பாரத திட்டம் (நகரம்) 2.0 கீழ், ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்கு கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 10.06.2024 அன்று மின்னனு (E-Tendering) முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், மின்னனு முறையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ் வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கா. மாமனந்தல் சாலை மற்றும் காந்தி ரோடு ஆகிய பகுதிகளில் உள்ள சமுதாய கழிவறைகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளுதல் (வார்டு எண்.04 மற்றும் 05) | ரூ 9,00,000 | திருமதி. M.செல்லம்மாள். கள்ளக்குறிச்சி | **0.05 % மதிப்பீட்டிற்கும் குறைவு** |
| | | | **M/s சக்தி கன்ஸ்ட்ரகஷ்ன்ஸ் கள்ளக்குறிச்சி** | 2.74 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | கருணாபுரம் புதிய காலணி பகுதியில் உள்ள சமுதாய கழிவறையை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளுதல் (வார்டு எண்.09) | ரூ 7,50,000 | **M/s சக்தி கன்ஸ்ட்ரகஷ்ன்ஸ் கள்ளக்குறிச்சி** | **0.05 % மதிப்பீட்டிற்கும் குறைவு** |
| | | | திரு. A.K.இளையாழ்வார். கள்ளக்குறிச்சி | 2.60 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3. | கரியப்பா நகர் மற்றும் ஏமப்பேர் கிழக்கு தெரு ஆகிய பகுதிகளில் உள்ள சமுதாய கழிவறையை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளுதல் (வார்டு எண்.19 மற்றும் 21) | ரூ 10,50,000 | திருமதி. M.செல்லம்மாள். கள்ளக்குறிச்சி | **0.05 % மதிப்பீட்டிற்கும் குறைவு** |
| | | | **M/s சக்தி கன்ஸ்ட்ரகஷ்ன்ஸ் கள்ளக்குறிச்சி** | 2.82 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |

மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கிய ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கி மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கி மேல்நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேற்படி பணிகளுக்கு பட்டியல் படி தொகையினை திட்ட நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1513 / 2022 / இ1)**

## பொருள் எண். 70

கள்ளக்குறிச்சி நகராட்சியில் வருவாய் நிதி 2023-2024ன் கீழ் கீழ் காணும் பணி மேற்கொள்ளவதற்கு 29.02.2024-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | காந்திரோடு R.K ரைஸ் மில் தெருவில் உள்ள சிமெண்ட் சாலையில் ஒட்டுப்பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் பக்க சுவர் அமைக்கும் பணி (வார்டு எண்.05) | ரூ. 1,20,000/- | M/s AS கன்ஸ்ட்ரகஷன்ஸ் கள்ளக்குறிச்சி | 0.07% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. N.செங்கோட்டையன். கள்ளக்குறிச்சி | 2.67% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டைவிட 0.07% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **M/s AS கன்ஸ்ட்ரகஷ்ன்ஸ்,** கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணியின் அவரச அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய **M/s AS கன்ஸ்ட்ரகஷ்ன்ஸ்,** கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
4. பட்டியல்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2292/ 2023 / இ1)

## பொருள் எண். 71

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 6450 / 2024 / SBM-1(1), நாள்.14.03.2024-ல், தூய்மை பாரத திட்டம் (நகரம்) 2.0 கீழ், ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.3.84 இலட்சத்திற்கு கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 10.06.2024 அன்று மின்னனு (E-Tendering) முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், மின்னனு முறையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ் வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கச்சிராயபாளையம் சாலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில், சேலம் பிரதான சாலை மணிகூண்டு பேருந்து நிறுத்தம் அருகில் மற்றும் சுந்தரவிநாயகர் கோவில் தெரு உழவர் சந்தை அருகில் ஆகிய பகுதிகளில் சிறுநீர் கழிப்பிடங்கள் அமைத்தல் | ரூ 3,84,000 | திருமதி. M.செல்லம்மாள். கள்ளக்குறிச்சி | 0.05% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s சக்தி கன்ஸ்ட்ரகஷ்ன்ஸ் கள்ளக்குறிச்சி | 2.19% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.05% குறைவான விலைவிகித ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருமதி.M.செல்லம்மாள். கள்ளக்குறிச்சி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கி மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் "0.03%" மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **"திருமதி. M.செல்லம்மாள். கள்ளக்குறிச்சி"** என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கி மேல்நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை திட்ட நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 747 / 2024 / இ1)

## பொருள் எண். 72

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 21 வரையில் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு நகராட்சி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றனர். இதில் குடிநீர் விநியோகத்திற்காக 76 கி.மீ தூரம் பகிர்மான குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் அவ்வப்போது குழாய்கள் உடைப்புகள் ஏற்பட்டு பழுதடைந்து குடிநீர் விநியோகம் செய்யும் பணி பாதிப்பு ஏற்படுகிறது, எனவே,மேற்படி குடிநீர் விநியோக குழாய்களில் ஏற்பட கூடிய பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்து பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் வழங்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, குடிநீர் விநியோக பணிகளின் முக்கியத்துவத்தினை கருதி, பொதுமக்களுக்கு தங்கு, தடையின்றி குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக பழுதுகள் ஏற்படும் குடிநீர் விநியோக குழாய்களில் பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7,00,000/- (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1536 / 2024 / இ2)

## பொருள் எண். 73

கள்ளக்குறிச்சி நகராட்சி பேருந்து நிலையத்தின் உள்ளே தெற்கு பகுதியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள இறைச்சி கடைகள் பக்கவாட்டு சுவர் மற்றும் மேற்கூரை வசதிகள் மட்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அவற்றில் மின் வசதிகள் மற்றும் சுற்று பகுதியில் திறந்த வெளி பகுதியாக உள்ளதால் அக்கடைகள் பொது ஏலம் நடத்தி குத்தகை விடும் பட்சத்தில் அக்கடைகளுக்கு தேவையான மின்வசதி மற்றும் பாதுகாப்பு வேலி (Weld Mesh) வசதிகள் ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, மேற்படி புதியதாக அமைக்கப்பட்டுள்ள இறைச்சி கடைகளுக்கு மின்வசதி, பாதுகாப்பு வேலி (Weld Mesh) வசதிகள் மற்றும் குடிநீர் வசதிகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5,50,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1525 / 2024 / இ1)

## பொருள் எண். 74

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்–14ல் விளாந்தாங்கல் ரோடு சர்வே எண்.328/4சி சம்மந்தப்பட்ட SRS மனைப்பிரிவில் பூங்கா இடத்திற்கு ஒதுக்கீடு செய்ப்பட்டுள்ள 1496 சதுரடி பரப்பளவில் உள்ள இடத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையத்திற்கு (ICDS) புதிய கட்டடம் அமைக்க அனுமதி வழங்க வேண்டி 14–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் 15.03.2024ஆம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார்.

மேற்படி, மனைப்பிரிவில் பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தினை அரசாணை (நிலை) எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள் 04.05.2017ன் படி கட்டமைப்பு வரைபடத்தில் மாற்றம் செய்யவோ, வேறு பயன்பாட்டிற்கு உட்படுத்தவோ நகர் ஊரமைப்பு துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னரே செயல்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி இடம் பூங்காவாக பயன்படுத்திட இயலாத வகையில் அதன் பரப்பளவு17 X 88 என்ற அளவில் அமைந்துள்ளது இந்த சிறிய அளவிலான இடத்தில் சிறுவர் விளையாடும் இடம் அல்லது பூங்காவாக பயன்படுத்த இயலாது. மேலும் அப்பகுதி பொதுமக்கள் நலன் கருதி பொதுபயன்பாடு கட்டடம் அமைக்க ஏதுவாக வரைபடம் மற்றும் உத்தரவில் உபயோக பகுதியாக மாற்றம் செய்து வழங்கிட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கள்ளக்குறிச்சி அவர்களுக்கு உரிய முன்மொழிவுகள் சமர்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 746 / 2024 / எப்1)**

## பொருள் எண். 75

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டு பகுதியில் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் ஆய்வுக் கூட்டங்கள், நேரடி தலஆய்வுகள் மற்றும் நகராட்சி அறிவிப்புகள் ஆகியவற்றை சமூக ஊடகங்களான Twitter, Facebook, Whatsapp, Instgram, Youtube மற்றும் சமூக வலைதளங்களில் பதிவேற்றம் செய்யவும் பொதுமக்களிடம் இருந்து சமூக ஊடகம் மற்றும் வலைதளம் மூலம் வரப்பெறும் குறைகளைதொடர்ந்து கண்காணித்து தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சமூக ஊடக நிர்வகிக்கவும், பராமரிப்பு பணிகளை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ள மாதம் ஒன்றிற்கு ரூ.7,000/–வீதம் ஒரு வருடத்திற்கு ரூ.84,000/–மதிப்பீட்டில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1537 / 2024 / இ1)**

## பொருள் எண். 76

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 6450 / 2024 / SBM–1(1), நாள்.14.03.2024–ல், தூய்மை பாரத திட்டம் (நகரம்) 2.0 கீழ், ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.80.00 இலட்சத்திற்கு கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 10.06.2024 அன்று மின்னனு (E–Tendering) முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், மின்னனு முறையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ் வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | **தூய்மை இந்தியா திட்டம் (நகரம்) 2.0** துருகம் சாலையில் உள்ள நகராட்சி குப்பை கிடங்கில் கூடுதலாக உள்ள குப்பைகளை உயிரி அகழ்வு (Bio Mining) முறையில் குப்பைகளை பிரித்து இடத்தை மீளப்பெறும் பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ 80,00,000 | M/s HUMAN GRID PRIVATE LTD Chennai–600 018. | 0.94% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s RR COMPAY PRIVATE LTD Perambalur–621 212. | 5.55% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.94% குறைவான விலைவிகித ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s HUMAN GRID PRIVATE LTD. Chennai–600 018 என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கி மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் "0.94%" மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள "M/s HUMAN GRID PRIVATE LTD. Chennai–600 018" என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கி மேல்நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை திட்ட நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2262 / 2022 / இ1

## பொருள் எண். 77

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.33553/2022/EA2–SWM–18 நாள்.10.01.2023 ல் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை வெளிக்கொணர்வு முகமை (Out Sourcing) அடிப்படையில் வார்டு எண்.01 முதல் 21 வரை தூய்மை பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை – 28 அவர்களின் கடிதம் ந.க.எண்.001/2022/DO1 நாள்.03.02.2023 ல் ஒப்பந்தப்புள்ளி தெளிவுரை பெறப்பட்டு மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி பெற கடந்த 27.04.2023 அன்று கோரப்பட்டதில் M/s.கிரின் வாரியர் திருவள்ளூர் என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு கடந்த 01.07.2023 அன்று முதல் ஓராண்டிற்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தற்போது 30.06.2024 அன்றுடன் ஓராண்டு பணிக்காலம் முடிவடைகிறது. மேலும், இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் அவர்களால் மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் நகரப்பகுதியில் தூய்மை பணிகள் நல்லமுறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என சான்று அளித்துள்ளார். எனவே, பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் மேற்கண்ட நிறுவனத்தின் மூலமாகவே எதிர்வரும் 01.07.2024 அன்று முதல் ஓராண்டு காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் ஏற்கனவே பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் M/s.கிரின் வாரியர், திருவள்ளுர் என்ற நிறுவனத்தின் மூலம் 01.07.2024 முதல் ஓராண்டு காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களால் முன்னனுமதி வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி மற்றும் 15வது நிதிக்குழு நிதியின் மூலம் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2682/2022/எச்1)

## பொருள் எண். 78

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01–ல் உள்ள மோரைபாதை பிரதான சாலை பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டு பத்தாண்டுகளுக்கு மேல் ஆகிறது தற்போது இக்குழாய்களில் முழுவதும் பழுதுகள் ஏற்பட்டு குடிநீர் குடிநீர் விநியோகம் செய்வது தடைபடுகிறது.

எனவே, மோரைபாதை பிரதான சாலை பகுதியில் உள்ள பிள்ளையார் கோவில் அருகில் குடிநீர் விநியோகத்திற்கு இரும்பு ஸ்டேன்ட் அமைத்து அதன் மீது 5000லிட்டர் சின்டெக்ஸ் குடிநீர் தொட்டி அமைத்து அருகில் உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யவும், தடையின்றி குடிநீர் வழங்க கோரி 01–வது நகர்மன்ற உறுப்பினர், அவர்களின் 26.06.2024ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். எனவே, மேற்படி பகுதியில் இரும்பு ஸ்டேன்ட் அமைத்து அதன் மீது 5000 லிட்டர் சின்டெக்ஸ் குடிநீர் தொட்டி குடிநீர் விநியோகம் செய்யும் பணிகள் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது.

எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)–க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிகலாம்.
2. தொகையினை குடிநீர் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1400 / 2024 / இ2)

**நகர் மன்ற தலைவர்**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**